போன் நெ: 15. விலை 2 அணா. REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 20—12—53 | இதழ் 25

துவேஷம், எங்கே துளிர் விடுகிறது?

[- நக்கீரன் -]

மக்களுக்குக் கடவுள் நம்பிக்கையை உண்டாக்க எண்ணுகின்றவர்கள், தங்களாற் கூறப்படுங் கடவுட் கதைகள் எல்லாம் கடவுளாலேயே சொல்லப்படுவன என்று எழுதிவைப்பது அவர்களின் வழக்கமாய் வந்துவிட்டது. தங்கள் பிழைப்புக்காகக் கூறப்படுங் கதைகள் எல்லாம், கடவுளாற் சொல்லப்பட்டனவென்று எழுதி வையாவிடின், மக்கள் அவற்றை நம்பமாட்டார்கள் என்றும், ஆகவே தங்கள் பிழைப்புக்கு வழி ஏற்படாதென்றுங் கருதியே அங்ஙனம் எழுதி வைப்பாராயினர். இங்ஙனம், பொய்ப் பெயரிட்டுக் கதைகள் எழுதி மக்களை ஏமாற்றுகின்றவர்களை அக்காலத்து அரசர் தண்டித்ததாகவுந் தெரிகிறது. எடுத்துக் காட்டாக ஈண்டு ஒரு நிகழ்ச்சியை மட்டுங்குறிப்பிடுகிறேன். மார்க்கண்டேய புராணம் முதலான கதைகளை எழுதிய சைவர்கள், அவற்றைக் கடவுளரும் முனிவரும் எழுதியதாகப் பொய்ப் பெயரிட்டு வழங்கியதை அறிந்த போசராசன், அவர்கள் கைகளை வெட்டித் தண்டனையளித்து, இனிமேல் அங்ஙனஞ் செய்தல்கூடாதென்று எச்சரிக்கை செய்ததாகப் போசராசனாற் செய்யப்பட்ட 'சஞ்சீவினி' என்னும் நூலிற் காணப்படுகின்றது. எனவே கடவுள் பெயரை வைத்துக் கதைகள் எழுதுவது, மக்களை ஏமாற்றிப் பிழைப்பதற்காக ஒரு சிலராற் கையாளப்படும் முறை என்பது இதனாற் புலனாகின்றது.

★

நமது தமிழ் மொழி இயற்கை அமைப்பும் இனிமைச் செறிவும் வாய்ந்த ஒரு உயர்தனிச் செம்மொழியாகும். இதனை ஒப்பதும் மிக்கதுமான ஒரு மொழி உலகின் எப்பகுதியிலும் இல்லை என்று கூறின், அது மிகையாகாது. இயற்கை அமைப்பும் இனிமையும் பெற்றுள்ள இதன்கட் செயற்கையும் புனைவும் கலப்பும் புக விடுதல் அடாது. பண்டைத் தமிழ்ப் புலவர்கள், செயற்கையும் புனைவுமாகிய மாசுகள் தமிழ் மொழியை அணுகாது பாதுகாத்து வந்தனர். உண்மையாக நடவாதனவும், இயற்கைக்கு மாறானவும், பகுத்தறிவிற்குப் பொருந்தாதனவுமான எதனையும் பண்டைத் தமிழ் நூல்களிற் காண்டல் அரிது. ஆரியர் நம்மிடையே வந்து கலந்த பின்னர் தான், பகுத்தறிவிற்கும் இயற்கைக்கும் மாறான பல புனைவுரைகள் தமிழிற் புகுவவாயின. ஆரியர், தங்கள் பிழைப்பிற்காக, இல்லாதனவும் நடவாதனவுமான பல பொய்க் கதைகளைத் தங்கள் வடமொழியில் எழுதிவைத்ததுமன்றி, அவை எல்லாம் கடவுளைப்பற்றிய புதுமை வரலாறுகள், கடவுளால் சொல்லப்பட்டவை என்றுங் கூறி, அக்காலத் தமிழரசரின் உதவியைப் பெற்றுத் தமிழ் மக்களை ஏமாற்றி விட்டனர். பொய்யும் வழுவுந் தோன்றாத பண்டைக் காலத்தில் வாழ்ந்து போந்த கள்ளங் கவடற்ற தமிழ் மக்கள், தங்களைப்போலவே பிறரையும் எண்ணும் இயல்பினரானதால், ஆரிய மக்கள் கூறிய புரட்டுக் கதைகள் எல்லாம் மெய்யானவை என்றே நம்பினார்கள்—நம்பும்படி செய்யப்பட்டார்கள். அதனால், அக்கதைகள் எல்லாம் வடமொழியுந் தமிழ் மொழியுங் கலந்த மணிப்பவள நடையில் மொழிபெயர்க்கப்பட்டுத், தமிழ் மக்களிடையே இயற்கைக்கு மாறான 'கடவுள் நம்பிக்கை' என்ற ஒரு புதிய உணர்ச்சி உண்டாவதாயிற்று. கடவுள் என்ற ஒரு தனிப் பொருள் எங்கோ இருந்துகொண்டு இவ்வுலகத்தை இயக்கிக்கொண்டிருக்கின்றதென்ற ஒரு இயற்கைக்கு மாறான உணர்ச்சி தமிழ் மக்களிடையே உண்டாக்கப்பட்ட பின்னர்தான், கடவுளைப்பற்றிய புதுமைக் கதைகள் பல தோன்றி மக்களுக்கு அடிமை உணர்ச்சியையும் மூட நம்பிக்கையையும் உண்டாக்குவவாயின. கடைக் கழகக் காலத்திலிருந்தே இவ் வேண்டாக் கடவுள் நம்பிக்கையும், அது காரணமாக ஏற்பட்ட தன்னையே தான் நம்பா மனப்பான்மையுந் தமிழ்மக்களுக்கு ஏற்பட்டுவிட்டதென்பதற்குக் கடைக் கழகக் காலத்தில் இயற்றப்பெற்ற நூல்களே சான்று பகர்கின்றன. கடைக் கழகக் காலத்திற்கு முந்திய இடை—தலைக் கழகக் காலங்களில் இயற்றப்பெற்ற தமிழ் இலக்கியங்களையும், கடைக் கழகக் காலத்தில் இயற்றப்பெற்ற தமிழ் இலக்கியங்களையும் ஒப்பு நோக்கிப்

பார்ப்பவர்க்கு யாம் கூறும் இவ்வுண்மை நன்கு புலனாகும்.

கடைச் சங்க காலத்திற்கும் இவ்விருபதாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட 2000 ஆண்டுகளில்தான் பல்வேறு மதங்களும், அவற்றிற்கேற்பப் பல்வேறு கடவுளரும், அவற்கேற்பப் பல்வேறு மத நூல்களுந் தோன்றி மதச் சண்டைகள் ஏற்படுவவாயின. இக்காலத்திலேதான், புத்தம்—சமணம் — சைவம்—வைணவம் முதலான மதங்கள் தமிழ் நாட்டிலே தோன்றி ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கலாம்விளைத்தன. புத்தம் சமணம் முதலான மதங்களை ஒழிப்பதற்காகச் சைவ மதமும் அதன் தலைவர்களான சம்பந்தர் மாணிக்கவாசகர் முதலான சமயாச்சாரியார்களுந் தோன்றினர். இவர்கள்தாம் சமணர்களையும் புத்தர்களையும் கழுவில் ஏற்றியும், 'புத்தனார் தலை தத்தெனத் தத்துமே' என்ற பாடலைப் பாடி மண்டையில் அடித்துங் கொன்றழிக்கும் கொடுமையைச் செய்து, அக்காலத் தமிழரசரின் உதவியால், ஆரிய மதமான சைவ மதத்தைத் தமிழ்நாட்டில் நிலைபெறச் செய்தவராவர். அதன் பின்னர்தான், வடநாட்டிலே சடகோபர்—முனிபாணர்—யாவனாச்சாரி முதலியோரால் ஏற்படுத்தப்பட்ட வைணவ மதம், நம் போலும் மக்களினத்தாரில் ஒருவரான் இறந்துபோன இராமன் என்னும் அயோத்தி மன்னனைக் கடவுளாகக்கொண்டு, இராமானுசர் என்பவரால் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுச், சைவத்திற்கும் வைணவத்திற்கும், மதப்போர் நிகழ்வதாயிற்று. அஞ்ஞான்று தமிழ் நாட்டிலே சைவந் தலைதூக்கி நின்ற காலமாதலால், வைணவத்தால் சைவத்தை வெல்ல முடியாது போயிற்று. என்றாலும், வைணவத்தைத் தமிழ் நாட்டில் பரவவிடாதபடி தடுக்கக்கூடிய அத்துணை ஆற்றல் சைவத்தினிடமும் இல்லாமற் போயிற்று. போகவே, சைவமும் வைணவமும் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டே தமிழ்நாட்டில் நிலைபெறுவவாயின. (இன்றைக்குஞ் சைவ வைணவ உயர்வு—தாழ்வுப் போட்டிப் பந்தயங்கள் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன.)

இந்த நிலையில்தான், வைணவத்திற்கு உயிர்ப்பிச்சை அளிக்கும் 'பத்தவிசயம்' என்னுங் கதை நூலும், சைவத்திற்கு உயிர்ப்பிச்சை அளிக்கும் 'பெரியபுராணம்' என்னுங் கதை நூலும், முறையே வைணவர்களாலும் சைவர்களாலும் உண்டாக்கப்பட்டன. இவ்விரண்டு புராணங்களும் ஒன்றுக்கொன்று போட்டி போட்டு எழுதப்பெற்ற கற்பனைக் கதைகள் என்பதற்கு அவற்றில் வரும் வரலாறுகளே சான்று பகர்கின்றன. பத்தவிசயத்தில் ஒரு கோராகும்பர் என்னுங் குயவர் கதை இருப்பதுபோலவே, பெரிய புராணத்திலும் ஒரு திருநீலகண்டர் என்னுங் குடவர் கதையும், பத்தவிசயத்தில் ஒரு திருப்பாணாழ்வார் என்னும் புலையர் கதை இருப்பதுபோலவே, பெரிய புராணத்திலும் ஒரு திருநாளைப் போவார் (நந்தனார்) என்னும் புலையர் கதையும் எழுதப்பட்டிருக்கின்றது. இங்ஙனமே அவ்விரண்டு புராணங்களிலும் பேசப்படும் மற்றைக் கதைகளும் ஒன்றை ஒன்று

(13-ம் பக்கம் பார்க்க)

தூத்துக்குடி சதி வழக்கு
துவங்கப்பட்டுவிட்டது!

தி. மு. க சார்பில், ஏழு வழக்கறிஞர்கள் கலந்துகொண்டு வருகின்றனர்.

—⊛—

கழகக் கண்மணிகள் சிவசாமி, தங்கப்பழம், நடராசன், சாமி, ரத்னம்

ஆகிய தோழர்களையெல்லாம் விடுதலை வீரர்களாக என்று காண்போம்?—எனத் தாயகம் தவிக்கிறது.

★

தோழர்காள்! துயர் துடைக்க ஒவ்வொருவரும் முன் வாருங்கள். இயன்றளவு அனுப்பி உதவுங்கள். ரூபாய் ஏழாயிரம் கிடைத்துவிட்டது. இன்னும் ரூபாய் பதின்மூன்றாயிரமாவது தேவை!!

தேவையை நிரப்பத் தோழர்காள், விரைவீர்! விரைவீர்!

—தி. மு. க.

முகவரி: அ. பொன்னம்பலனார்
'அறிவகம்' ராயபுரம், சென்னை.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா

ஆச்சாரியாரின் ஆயாசம் தீருமா?

காங்கிரசில் நல்லவர்கள் இருந்தது
அந்தக் காலம்.
காங்கிரசில் கெட்டவர்கள் இருப்பது
இந்தக் காலம்.
காங்கிரசில் உண்மை இருந்தது
அந்தக் காலம்.
காங்கிரசில் பொய் மலிந்தது
இந்தக் காலம்.
காங்கிரசில் மதிப்பு இருந்தது
அந்தக் காலம்.
காங்கிரசில் மானம் பறி போவது
இந்தக் காலம்.
காங்கிரசில் யோக்கியர்கள்
இருந்தது அந்தக் காலம்.
காங்கிரசில் அயோக்கியர்கள்
மலிந்தது இந்தக் காலம்.
காங்கிரசில் நாணயம் இருந்தது
அந்தக் காலம்.
காங்கிரசில் பித்தலாட்டம்
நிறைந்தது இந்தக் காலம்.
காங்கிரசில் ஒற்றுமை இருந்தது
அந்தக் காலம்.
காங்கிரசில் பிளவு ஏற்பட்டது
இந்தக் காலம்.
காங்கிரசில் பொது நலம் இருந்தது
அந்தக் காலம்.
காங்கிரசில் சுயநலம் மிகுந்தது
இந்தக் காலம்
காங்கிரசில் பலம் இருந்தது
அந்தக் காலம்.
காங்கிரசில் பகை மிஞ்சியது
இந்தக் காலம்.

*

எதிர்க்கட்சிகள் இல்லாமலிருந்தது
அந்தக் காலம்.
எதிர்க்கட்சிகள் ஏராளமாகஇருப்பது
இந்தக் காலம்.

*

இப்படியெல்லாம் காங்கிரசின் எதிரிகள்தான் காங்கிரசைப்பற்றிக்

[அடிகள்]

★

குறை கூறுவார்கள் என்று எவருக்கும் எண்ணத் தோன்றும்.

"ஸ்தயமேவ ஜயதே" என்ற கொள்கையோடு வாழ்பவர்களைப் பற்றி, "துவேஷமேவ ஜயதே" என்ற கொள்கையோடு வாழ்பவர்கள்தான் இவ்வாறெல்லாம் கூறியிருக்கமுடியும் என்றும் எண்ணுவர் பலர்.

ஆனால், உண்மையில் காங்கிரசின் எதிரிகள் எவரும் இவ்விதம் கூறவில்லை. கூறவேண்டிய அவசியம் இல்லை. அவசியம் ஏற்பட்டாலும், அதற்கு நேரமும் ஓய்வும் இல்லை. அவர்களுக்கு அவர்களுடையவேலைகளைக்கவனிக்கவேகாலம்போதாமல் இருக்கிறபோது, எதிரிகளைப்பற்றிக் குறை கூறிக்கொண்டு திரியவா நேரமிருக்கிறது?

வேலைவெட்டியற்ற விதண்டாவாதிகள்போல் வீண்வம்பளக்க நமக்கு (காங்கிரசின் எதிரிகளுக்கு) நேரமேது? ஓய்வேது?

இலட்சியத்துக்காக வாழ்பவர்கள், இலாபத்துக்காக வாழ்பவர்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்க மாட்டார்கள்.

வேலைக்குக் கூலி கேட்பவனுக்கும், உதவிக்குச் சன்மானம் கேட்பவனுக்கும் இடையே உள்ள வித்தியாசம் இருக்கிறதே, அது மிகப் பெரிது.

*

எனவே, காங்கிரசைப்பற்றிக் கூறப்பட்ட இந்த வாசகங்கள் முழுவதும் ஒரு காங்கிரஸ்காரராலேயே கூறப்பட்டதாகும். காங்கிரஸ்காரர் என்றால், சாதாரண காங்கிரஸ்காரர் என்று எண்ணிவிடாதீர்கள். காங்கிரசின் மானத்தைக் காக்க வந்திருக்கும் மகானுபாவர்தான் மேலே தரப்பட்டிருக்கும் வாசகங்களால் காங்கிரசை அர்ச்சித்திருக்கிறார்.

12–12–53ல் பழனியாண்டவர் சந்நிதியில் நின்றுகொண்டு,

"இதை நான் இதற்குமுன் கூறியதில்லை. இது பழனியலை க்ஷேத்ரமாகையால் இங்கு கூறுகிறேன்"

என்ற அடைமொழிகளுடன் அர்ச்சித்திருக்கிறார்

மதவாதிகள், கடவுள் பக்தர்கள் ஆகியோர் ஆண்டவன் முன்னிலையில் பொய் பேசமாட்டார்கள் என்ற ஒரு பழமொழி வைதிக உலகில் வழங்கப்படுவதுண்டு. அதற்கேற்ப மத பாதுகாவலராம் ஆச்சாரியார் பழனியாண்டவர் சந்நிதியில் நின்றுகொண்டு, பொய் பேசக்கூடாதென்ற பழமொழியை நினைவில் வைத்துக்கொண்டு, 'காங்கிரசின் உண்மை வடிவம் இப்போது இதுதான்" என்று ஒளிவு மறைவின்றிக் கூறிவிட்டார்.

ஆனால், இந்தப் பழமொழி பகுத்தறிவுலகிற்கு ஒருபோதும் பொருந்தாது. பகுத்தறிவுலகில் வழங்கப்படும் அகராதியில் பொய் என்ற சொல்லுக்கே இடமில்லை. எதனையும் பகுத்தறிந்து பேசுபவர்களுக்குப் பொய் சொல்லவேண்டிய சந்தர்ப்பமோ அவசியமோ எந்தக் காரணத்தைக் கொண்டும் ஏற்படாது. எனவேதான், வைதிக உலகினர் கையாளும் மேற்படி பழமொழி பகுத்தறிவுலகினர்க்குப் பொருந்ாதென்று கூறினேன்.

*

ஆச்சாரியாரின் பழனிச் சொற்பொழிவை மேற்போக்காகப் படிப்பவர்களுக்குக்கூட, அவர் காங்கிரசைப்பற்றிக் கூறிய குற்றச்சாட்டு வாசகங்கள் மிக மிகச் சுலபமாகத் தென்படும்.

"காங்கிரஸ்காரர்கள் என்றால்;
நல்லவர்கள்; அயோக்கியர்கள்
அல்ல; உண்மையாக நடப்பவர்
கள்; சொன்ன சொல்லை மதிப்ப
வர்கள்; யோக்கியர்கள் என்ற

பெயரை மக்களிடம் பெறுவது தான் ஐவேஜி. அப்படி ஏற்பட்டால், காங்கிரசுக்குத்தோல்வியே ஏற்படாது. நம் நடத்தை, நாணயம்தான் நமக்குச் சொத்து''

என்று பேசியுள்ளார். இதற்கு விளக்கம் கூறத் தேவையில்லை என்ற போதிலும், சில ஆச்சாரியாரன்பர்கள் இருக்கிறார்களே, "எங்கள் ராஜாஜியின் பேச்சில் அப்பழுக்குக் காணமுடியுமா'' என்ற வார்த்தைகளோடு மூச்சுத் திணறி மேற்கொண்டு எதும் பேசமுடியாத நிலையைப் பெறுபவர்கள்—அப்படிப்பட்டவர்களுக்காகவாவது ஒரு சிறு விளக்கம் கூறித் தீரவேண்டியிருக்கிறது.

காங்கிரசில், நல்லவர்களில்லை, யோக்கியர்கள் இல்லை, உண்மையாக நடப்பவர்கள் இல்லை, சொன்ன சொல்லை மதிப்பவர்கள் இல்லை, நன்னடத்தையுடையவர்கள் இல்லை, நாணயமானவர்கள் இல்லை, என்ற இவைபோன்ற பல குற்றச் சாட்டுகளை, ஆச்சாரியார் காங்கிரஸ்காரர்கள்மீது சுமத்தி, இந்தக் குற்றச் சாட்டுகளுக்கு இனிமேலாவது காங்கிரஸ்காரர்கள் இலக்காகாமல்நடந்து கொள்ள முயற்சிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறார். நல்ல நடத்தை, நாணயம் ஆகியவற்றைக் காங்கிரஸ்காரர்கள் தங்கள் சொத்தாகப் பெற்றுவிட்டார்களானால், அவர்களுக்குத் தோல்வியே ஏற்படாதென்ற உத்தரவாதத்தையும் ஆச்சாரியார் தருகிறார்.

"அப்படி ஏற்பட்டால்.........'' என்று ஆச்சாரியார் அங்கலாய்க்கிறார்—ஆயாசப்படுகிறார்—ஆசைப்படுகிறார். இப்போது போலில்லாமல் இனிமேலாவது காங்கிரஸ்காரர்கள் எல்லோரும் நல்லவர்களாகவும், நாணயவான்களாகவும் ஆகிவிட்டால், காங்கிரஸ் அகராதியில் தோல்வி என்ற சொல்லே இருக்காதென்று இறும்பூதெய்கிறார் ஆச்சாரியார். ஆனால், ஆச்சாரியாரின் இந்த ஆசையை அவருடைய சகாக்களான காங்கிரஸ்காரர்கள் நிறைவேற்றி வைக்க வேண்டுமே! ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? ஆண்டவன் சந்நிதியில் அழுது புலம்பி முறையிடுமளவுக்குக் காங்கிரசில் ஊழல் அதிகரித்துள்ள இந்த இரங்கத்தக்க நிலையில், ஆச்சாரியாரின் இந்த ஆசை நிறைவேறுமா என்பது சந்தேகம்தான்.

'திராவிட நாடு'
பொங்கல் மலர்

ஓர் தித்திக்கும் சுரங்கம்!

*

சி. என். ஏ.

தீட்டும், கதை—கட்டுரைகள்

*

கழக முன்னணி வீரர்கள் வழங்கும்
அறிவுப்படையல்கள்

*

மூன்று கலர் ஆர்ட் முகப்பு

*

★ ஒவ்வொருவர் கையிலும்
இருக்கவேண்டிய மலர் ★

*

விலை ரூ. 1

ஏஜண்டுத் தோழர்கள், தங்களுக்குத் தேவையான காப்பியின் எண்ணிக்கை விபரத்தையும், அதற்குரிய தொகை முழுவதையும் 30—12—53-க்குள் அனுப்பவேண்டும்

மலருக்குரிய தொகை முழுவதும் 30—12—53-க்குள் அனுப்பாதவர்களுக்கு மலர் கண்டிப்பாக அனுப்ப முடியாது.

தனி மலர்

தனி மலர் தேவைப்படும் தோழர்களும், சந்தாதாரர்களும் ரூபா 1—7—0 அனுப்பினால், ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பப்படும். இதனால், மலர் கிடைக்கவில்லை என்ற குறை ஏற்படாது.

நிர்வாகி.

குடத்தில் இருக்கும் பொருள் குறைவாய் இருக்கும் வரையில், அதற்குள் இருப்பது என்ன என்று, குடத்தை நிரப்புபவர்களன்றிப் பிறத்தியார் எவருக்கும் தெரியாது. சில சமயங்களில், குடத்துக்குச் சம்பந்தப்பட்டவர்களுக்கே கூட, அது, எந்தப் பொருளால் நிரப்பப்படுகிறதென்பது தெரியாமல் போய் விடுவதுமுண்டு. குடம் நிரம்பி வழியும்பொழுதுதான், அது எதனால் நிரப்பப்பட்டதென்று தெரிந்து கொள்ள முடிகிறது. அந்த அளவுக்குக் குடத்துக்குச் சம்பந்தப்பட்டவர்களுக்கும் குடத்தை நிரப்புவனுக்கும் இடையே தொடர்பு இல்லாமல் போய்விடுகிறது. குடம், எல்லோருக்கும் பொதுவான ஒரு பொருள் என்ற போதிலும், குடத்தோடு தொடர்புடையவர்களும், அது நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு, நல்ல பொருள்களால் நிரப்பப்பட வேண்டுமென்பதில் கருத்துடையவர்களும், ஏனோதானோ

என்று பாராமுகமாய் இருந்த காரணத்தால், அது, எடுப்பார் கைப்பிள்ளையாகி, ஆர்லிக்ஸ் குடித்து வளர்ந்த குழந்தைக்கு புளித்த காடியும், கஞ்சியும் கொடுத்துக்கெடுத்துவிட்டதுபோல், ஏதேதோ கழிவுப்பொருள்களால் நிரப்பப்பட்டு, வழிந்தோடுவதைக் காணும்போதுதான்—அதன் முடை நாற்றம் மூக்கைத் துளைக்கும்போதுதான், குடம் பாழ்படுத்தப்பட்டிருப்பதை, அதற்குடையவர்களில் முக்கியமானவர்கள் உணர்கிறார்கள். உணர்ந்து குடத்தைச் சுத்தப்படுத்தலாமா என்று பார்க்கிறார்கள். குடத்தில் இருக்கும் பொருள்களை ஒவ்வொன்றாக எடுக்க எடுக்க, குப்பையும் கூளமுமாக வருகிறதேயொழிய, ஒன்றுகூட நல்ல பொருளாக இல்லையே என்ற கவலை ஏற்பட்டுத், தவலையை அடியோடு சுத்தப்படுத்தினாலன்றி, அது, எதற்கும் பயன்படாதென்பதை அதற்குடையவர்களில் சிலர் உணர்கிறார்கள். ஆனால் ஒருசிலர், குடத்தைச் சுத்தப்படுத்துவதைப் பார்க்கினும் குடத்திலுள்ள பொருள்களைச் சுத்தப்படுத்துவதன் வாயிலாகக் குடத்துக்குப் புனிதத் தன்மையை உண்டாக்கிவிடலாம் என்று கருதி அந்தப் பணியில் இறங்கி விடுகிறார்கள்.

இந்தப் பணியை இப்பொழுது ஆச்சாரியார் செய்து வெற்றியடையலாமென்று பார்க்கிறார்.

நெய் இருக்கவேண்டிய குடத்தில் நீர் இருந்தால், யாருக்குத்தான் வயிற்றெரிச்சல் உண்டாகாது?

ஆனால், நீரை நெய்யாக்கலாம் என்று நினைப்பது தவறுமட்டுமல்ல, அறியாமையின் உச்சநிலைக்குப் போவது போன்றதுமாகும்.

நீரைத் தூர ஊற்றிவிட்டு, குடத்தைத் துப்புரவாக்கி வைத்துக்கொண்டு, நெய் இருந்தால்—கிடைத்தால் அதில் ஊற்றி வைப்பதுதானே புத்திசாலித்தனம். அதைவிட்டு, மணலைக் கயிறாகத் திரிப்பதுபோல், நீரை நெய்யாக்க முயல்வது நல்லதா? அறிவுடைமைதானா?

நண்பர் காமராஜர் குடத்தைச் சுத்தப்படுத்த வேண்டுமென்கிறார்.

அன்பர் ஆச்சாரியார் குடத்திலுள்ள குப்பைகளைச் சுத்தப்படுத்தினால் போதும் என்கிறார்.

காங்கிரஸ் என்ற குடம், முன்பொரு காலத்தில் நல்ல பொருள்களாலேயே நிரப்பப்பட்டிருந்தது. அதனால், அந்தக் குடம், பொன்னேபோல் போற்றி வளர்க்கப்பட்டும் வந்தது. பின்னர் – நாளடைவில், அந்தக் குடத்தில் இருந்த நல்ல பொருள்களிற் சில மறைந்தும்; பல குடம் சரியாகப் பாதுகாக்கப்படாத காரணத்தால் வெளியேறியும் விடவே, அதனுள் குப்பையும் கூளமும் போய் விழத் தொடங்கிவிட்டது. அதனை, இப்பொழுது சுத்தப்படுத்தும் முயற்சியில், குடத்துக்குடையவர்கள் இரு பிரிவாகப் பிரிந்து, ஒரு பிரிவினர் குடத்தையும், இன்னொரு பிரிவினர் குப்பையையும் சுத்தப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளனர். இதில் யாருடைய முயற்சி வெற்றி பெறும் என்று ஆரூடம் கணித்தபடி உள்ளனர் வேறு ஒரு சிலர். இந்த மூன்று பிரிவினரும் அந்தக் குடத்துக்குச் சம்பந்தப்பட்டவர்கள்தான்.

குடம் கெடக்கூடாது—இது ஒரு பிரிவினரின் இலட்சியம்.

குப்பை சுத்தப்படுத்தப்பட வேண்டும்—இது இன்னொரு பிரிவினரின் குறிக்கோள்.

வெற்றி பெறுவது, குடமா? குப்பையா?—இதனை அறிய விரும்புவது இன்னொரு பிரிவினரின் நோக்கம்.

இலட்சியம்—குறிக்கோள்—நோக்கம் ஆகிய இந்த மூன்றும் பொருளளவில் ஒன்றுதான் என்றபோதிலும், அடிப்படையில் அவற்றிற்கு வேறு வேறு பொருள்கள் இருப்பதாக அந்த மூன்று பிரிவினரும் கருதிக்கொண்டுள்ளனர்.

இந்த மூன்று பிரிவினரும் குடம் உடையக்கூடாதென்பதில் பொதுவான கருத்தையே கொண்டவர்கள் என்றபோதிலும், குடம் புனிதமாக்கப்படுவதில், கருத்து வேற்றுமை உடையவர்களாகவே இருக்கின்றனர்.

இந்த மூன்று பிரிவினருள், முதலிரண்டு பிரிவினரும் குடத்துக்காக இப்பொழுது வேலை செய்பவர்கள். மூன்றாவது பிரிவினர், குடத்துக்காக வேலை ஏதும் செய்யாமலும், குடம் நல்ல முறையில் இருக்க வேண்டுமென்பதில்மட்டும் கவலையும் கொண்டவர்களாய் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பவர்கள்.

இந்த மூன்று பிரிவினருக்கும் அப்பாற்பட்ட எதிர்க்கட்சிக்காரர்களாகிய நாம், ஒன்றுக்கு இரண்டு, உபத்திரவத்திற்கு மூன்று என்ற கவலையோடு, இப்படிப்பட்டவர்கள் இருக்கும்வரையில் நாடு முன்னேற்றம் அடைவது எப்படி என்ற ஏக்கத்தோடு, எப்பக்கம் திரும்பினும் இந்தக் குடமுருட்டிகளின் குத்துச் சண்டையைத்தான் காண்கிறோம். நாட்டு முன்னேற்றத்திற்கு இந்த நயவஞ்சகர்களின் நடமாட்டம் ஒழியவேண்டுமென்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்து பணியாற்றி வெற்றி காணவேண்டிய ஒரு நெருக்கடியான கட்டத்தில் கொண்டுவந்து விடப்பட்டிருக்கிறோம். தூத்துக்குடியும் கல்லக்குடியும் தொல்லை கொடுத்தபோதிலும் துவளாது பணியாற்றுவதில் தளராத ஊக்கங்கொண்டுள்ளது தி. மு. க. என்பது அந்த மூன்று பிரிவினருக்கும் தெரியும். என்றபோதிலும், அதிகாரத்தாலும், அச்சியந்திரத்தாலும் நம்மை அடக்கிவிடலாமென்று மனப்பால் குடிக்கின்றனர். உட்சுவர் உவரெடுக்கப் புறச்சுவர் பூசுகின்றனர்.

பொன்குடம் மண்குடமாக மாறியதேஎன்பதற்காகக்கவலையோ வெட்கமோ அடையாமல், புதுக்குடம் செய்பவர்களைப் பார்த்துப் பொறாமைப்பட்டுப் பொங்கி வழிகிறார்கள். நாம் செய்யும் புதுக்குடம் அவர்களின் பழையகுடத்தை உடைத்துவிடும் என்ற பயம் அவர்களுக்கு. எனவேதான் நம்மீது பாய்கிறார்கள். குடம் உருவாகாமல் தடுத்துவிடலாமென்று குன்றத்தூரிலிருந்து தூத்துக்குடிவரை செல்லுகிறார்கள். அவர்களுக்கிருக்கும் அதிகார எல்லையையும் கடந்து தொல்லை தருகிறார்கள். அவர்களிடம் துப்பாக்கி, நம்மிடம் கண்ணியம்.

*

எதிர்க்கட்சிக்காரர்களை ஏளனம் செய்வதில் எங்களுக்கிணை யாரும் இல்லை என்கிறார்கள். எதிர்க்கட்சிக்கு மதிப்புக் கொடுக்க மனமொவ்வாத இவர்கள்தான், ‘சத்யமேவ ஜயதே’ என்பதற்கிணங்க நடப்பவர்களாம். நாம், தவஷமேவ ஜயதே’ என்று சொல்லிக்கொள்பவர்களாம்,

இவ்விதம் கூறுகிறார், ஆச்சாரியார்.

காங்கிரசில், சத்யம் அதாவது உண்மை ஒரு காலத்தில் இருந்ததென்னவோ உண்மைதான். ஆனால் அது இப்போது காங்கிரசில் இல்லை. உண்மை, காங்கிரசை விட்டு விலகிப் பலகாலமாகிவிட்டது. இதனை ஆச்சாரியாரே ஒப்புக்கொண்டு பேசியும் இருக்கிறார்.

"பல வருஷங்களுக்கு முன் இருந்தமாதிரி, முதல் ஸ்தானத்தைக் காங்கிரஸ் அடையும் முறையில் நடக்கவேண்டும்"

இவ்விதம் கூறுகிறார், ஆச்சாரியார். பல ஆண்டுகளுக்கு முன் காங்கிரசிடம் இருந்த சத்யம் இப்போது இல்லை. அதனைத் திரும்பப் பெற வேண்டுமென்கிறார். காங்கிரஸ்காரர்களிடமிருந்த சத்யம் இப்போது எங்கே இருக்கிறதென்பதையும் ஒளிவு மறைவின்றிக் கூறிவிட்டார். எதிர்க்கட்சிக்காரர்களாகிய நாம் மிகவும் சாமர்த்தியமாக அவர்களிடமிருந்த சத்யத்தைக் கற்றுக்கொண்டு அதன்படி நடக்கிறோமென்று ஆயாசத்தோடு வேறு கூறுகிறார். என்றாலும், நாம் "துவேஷமேவ ஜயதே" என்று கூறுபவர்களாம். 'சத்யமேவ ஜயதே' என்றால் 'உண்மையே வெல்லும்' என்று பொருள். உண்மையே வெல்லும் என்ற இலட்சியத்தோடு காரியமாற்றி வந்த காங்கிரஸ், தன்னுடைய பழைய நிலையை ஏன் இன்று இழந்துவிட்டது? அதனை மீண்டும் பெறவேண்டுமென்ற முயற்சியை ஏன் இப்போது மேற்கொள்கிறது? உண்மையே வெல்லும் என்ற இலட்சியத்தை, பொறாமையே வெல்லும் என்ற இலட்சியம் என்ன செய்துவிட முடியும்? பொறாமைக்காரர்களிடம் உண்மைக்காரர்களுக்கு ஏன் இவ்வளவு அச்சம்? பொறாமைக்காரர்களிடம் சாமர்த்தியம் இருக்கிறதாம். உண்மைக்காரர்களிடம் அது சுத்தமாக இல்லையாம். எழுதும் ஆற்றல், பேசும் திறமை எல்லாம் எதிர்க்கட்சிக்காரர்களிடம்தான் இருக்கிறதாம். இதுமட்டுமல்ல; எதிர்க்கட்சிக்காரர்களாகிய நாம், பலம் பொருந்திய கட்சியாக ஆகிவிட்டோமாம்.

இவ்வளவையும் ஆச்சாரியார் தம்முடைய பழனிச் சொற்பொழிவில் கூறியிருக்கிறார். அதோடு காங்கிரசுக்குள்ள பலக் குறைவையும், ஒற்றுமையின்மையையும், சாமர்த்தியக் குறைவையும், விளக்கியுள்ளார். காங்கிரசில் இருக்கும் தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் இடையே இப்போது ஏற்பட்டிருப்பது போன்ற 'லடாய்' முன்பெல்லாம் இல்லையென்றும் கூறி விசாரப்படுகிறார். காங்கிரஸ் தொண்டர்களுக்கென்று தனிக் கூட்டம் முன்பெல்லாம் போடுவதில்லையாம். இப்போது, அவர்களுக்கெனத் தனி மாநாடே கூட்டி மண்டையை உடைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறதாம். கோடு உயர்ந்து குன்றம் தாழ்ந்தபோதிலும், தொண்டர் தம் தொல்லை பொறுக்க முடியவில்லையே என்று பெருமூச்சு விடுகிறார்.

"நமக்குப் பலமான எதிரிகள் இருக்கும்போது நம்மிடையே கட்சி ஏற்படுத்தக் காரணம் ஒன்றுமில்லை"

என்று ஒப்பாரியைப் பாடுகிறார். காங்கிரசில் பலம் குறையக் குறைய எதிரிகளின் பலம் அதிகரிக்கிறதே என்று ஆயாசப்பட்டு ஆத்திரமடைகிறார். "பலம் பொருந்திய பிரிட்டிஷாரையே வென்ற நாம் சௌகரியமாக வாழலாம் என்று கருதினோம். அதற்கு இடையூறாக எதிரிகள் கிளம்பிவிட்டார்களே! இந்தநிலைமையிலா நீங்கள் கட்சிகட்டிக்கொள்வது? வேண்டாம்" என்று விசாரத்தோடு வினயமாகக் கேட்டுக்கொள்கிறார். தொண்டர்களோ துள்ளி எழுந்து உங்கள் துடுக்குத்தனத்தை அடக்கியே தீருவோம் என்கிறார்கள். ஆச்சாரியாரோ "முள்வேலியில் சிக்கிய துணிமாதிரி அவதிப்படுகிறேன்—என்னைக் காப்பாற்றுங்கள் என்கிறார். "முள்வேலியில் சிக்கிய துணி எந்தக் காரணத்தைக்கொண்டும் கிழியாமல் இருக்கவேண்டுமென்பதே என் விருப்பம்" என்கிறார். அதே சமயத்தில் "காங்கிரசுக்கு ஊனம் ஏற்படும்படியாக எதுவும் செய்யக்கூடாதென்பதே முக்கியம்" என்றும் கூறுகிறார்.

காங்கிரஸ் தொண்டர்களுக்கு ஆச்சாரியார் இரு பெரும் பொறுப்புக்களைத் தருகிறார்.

1. முள்ளில் சிக்கிய துணிபோல் அவதிப்படும் ஆச்சாரியாரைக் காப்பாற்றுவது.

2. காங்கிரசுக்கு ஊனம் எதுவும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது.

ஆச்சாரியாரின் இந்த இரண்டு வேண்டுகோள்களையும் காங்கிரஸ் தொண்டர்களால் நிறைவேற்றி வைக்க முடியுமா என்பது சந்தேகம் தான். ஏனென்றால், ஆச்சாரியாராலேயே காங்கிரசுக்கு ஊனம் ஏற்பட்டுவிட்டதென்று கருதி, அவரைக் காங்கிரசில் இருந்து விலக்க வேண்டுமென் நிலேயே காங்கிரஸ் தொண்டர்களிலிருந்து தலைவர்கள்வரை பலர் முயற்சி எடுத்துத் தலைமைப்பீடம்வரை சென்றுவரும் இந்த நிலைமையில், ஆச்சாரியாரின் முதல் வேண்டுகோளை நிறைவேற்றி வைக்கக்கூடிய காங்கிரஸ் தொண்டர்கள் எத்தனைபேர் முன்னுக்கு வருவார்கள் என்று கூறமுடியுமா? தோழர்கள் சுப்பிரமணியம் இராஜாராம்போன்ற விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரால், குன்றுபோல் வளர்ந்திருக்கும் எதிர்ப்பைச் சமாளித்து அடக்கிவிடமுடியுமா என்பது கேள்விக்குறிதான். தற்சமயம் இருக்கும் அதிகார மூலாம் ஒருக்கால் இந்த ஆபாசங்களை மூடி வைக்கப் பயன்படுமேயொழிய உண்மையை நெடுநாட்களுக்கு மறைத்துவைக்க எந்த அதிகார பலத்தாலும் முடியாதென்பது அரசியல் அனுபவம்பெற்றவருக்குமே தெரிந்த ஒன்றாகும். இதனை ஆச்சாரியாரும் அறிவார். என்றபோதிலும், தமக்கிருக்கும் பேச்சுவன்மையால் வழிந்தோடும் ஊழலை மறைத்துவிடலாம் என்று கருதுகிறார். பழனியப்பனைச் சாட்சியாகவைத்துத் தமை எப்படியாவது காப்பாற்றும்படி அவர்தம் தொண்டர்களை அடிபணிந்து கேட்டுக்கொள்கிறார். பாவம்! முள்வேலியில் சிக்கிய துணி கிழியக்கூடாதென்பதுதான் நம்முடைய விருப்பமும். ஆனால், முள்வேலியில் சிக்கிய துணியை எடுத்துத்தான் விடுவோமே நமக்கென்ன இதனால் என்று கருதி, கிட்டப்போய் துணியைத் தொட்டுப் பார்த்தால், அது தொடுவதற்கு முன்பே கிழிந்துவிடும்போல் இருக்கிறது — துணி மிக மிகப் பழசு—கிழியாமல் எடுக்க முடியாது என்று சொல்லுகிறார்கள்.

★

என்னவென்பீர் இதனை?

நாகலை எடுத்துவந்து நடுமாடத்துக்குள் வைத்துவிட்டுப் போன குறும்பனின் சேட்டையைக் கண்டு குடும்பத்தார் கண்டிக்கும்போது, வீட்டிலிருக்கும் காவல்காரன், 'நாகலா? அது, நாறுமே! நடுமாடத்திலா, வைத்தான் அவன் அப்படிச் செய்திருக்கக்கூடாதே! எடுத்தெறிய வேண்டுமென்று, சொல்கிறீர்கள்? ஏன், இருந்துவிட்டுப் போகட்டுமே!'' என்று 'விவேக விளக்கம்' தாக்கிளம்பினால் எப்படியோ அது போல, அன்பர் ஆச்சாரியார் 'கல்லக்குடி' பெயர் மாற்றம் குறித்து, சென்னை சட்டசபையில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்திருக்கிறார். 'டால்மியாபுரம்' என்றபெயர் நான் முன்பு முதல் மந்திரியாயிருந்தபோது, வைக்கப்பட்டது. அந்தப் பெயரை வைத்திருக்க வேண்டியதில்லை. என்னைக் கேட்டிருந்தால், தடுத்திருப்பேன். ஆனால், வைத்தாகிவிட்டது. அதனை இப்போது அகற்றவேண்டுவது அவசியமில்லை' என்று கோவிந்தசாமி எம். எல். ஏ. கேட்ட கேள்விக்குப் பதிலளித்திருக்கிறார். அழகு வீட்டுக்குள், அழுகலை வீசிய வீணனின் திமிரை காவல்காரன் அடக்கியிருக்கவேண்டும் — அது தவறிவிட்டதென்றால் அதனை எடுத்தாவது அப்பால் வீசவேண்டும் — அதையும் செய்யத்தவறியபோது, வீட்டார் சுட்டிக் காட்டியபோதாவது செய்திருக்கவேண்டும்—அதற்கெல்லாம் இசையாமல், 'மாடு'மீது மழை பெய்தமாதிரி, அசையாமல் ஆடாமல், புதிபதத்து வார்த்தம் கூறிக்கொண்டிருந்தால், என்ன செய்வீர்கள், அந்தக் காவல்காரனை? இழுத்துக்கொண்டுபோய் 'கீழ்ப்பாக்கத்தில்' விட்டுவிடுவதுதான் விவேகமான காரியம், என்பீர்கள்! நாட்டின் காவல்காரனாக உடைமாட்டிக்கொண்டிருக்கும் ஆச்சாரியாரை, நீங்களும் நானும் அப்படிச் செய்யமுடியாது. ஏனெனில், 'பயஜாரம்' அடிக்கத் துவங்கினால், ஆச்சாரியாரின் சீடர் 'கல்கி'யின் அலுவலகமே, 'கீழ்ப்பாக்கம்' ஆகிவிடுவது வழக்கம்—அதன்படி இப்போதும், பித்தர் விடுதியாகக் காட்சியளித்து வருகிறது. இந்தப் பித்தத்தின் விளைவுதானோ இப்பிதற்றல்— என்று ஐயமும் எழுகிறது.

அன்பர் கோவிந்தசாமி, வெளியுறவு அமைச்சர் மாணிக்கவேலரைக் கேள்வி கேட்டிருக்கிறார், ''டால்மியாபுரம் எனும் பெயரை மாற்றுமாறு, தி. மு. க., பஞ்சாயத்து போர்டுகளிலிருந்து சர்க்காருக்கு கோரிக்கைகள் வந்தனவா? திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவால் வெற்றிபெற்றவராகிய நீங்கள் என்ன செய்தீர்கள்!'' என்று. அதற்குப் பதிலளித்த மாணிக்கவேலர், ''ரெவின்யூ ரிகார்டுகளிலெல்லாம் கல்லக்குடி என்கிற பெயரே இருக்கிறது; ஆகவே, அவ்விதம் மாற்றம் செய்யவேண்டிய ஏற்படவில்லை. ரயில்வே ஸ்டேஷன், போஸ்டாபீஸ் முதலிய இடங்களில் 'டால்மியாபுரம்' எனும் பெயரே இருக்கிறது. இதை மாற்றுவது, மத்திய சர்க்காரின் வேலை'' என்று பதிலளித்திருக்கிறார். இதற்கிடையில் புகுந்து அன்பர் ஆச்சாரியார், மேற்கண்ட விளக்கத்தைத் தந்திருக்கிறார்! இவர், முதல்மந்திரியாக இருந்தபோதுதான், 'டால்மியாபுரம்' என்றபெயர் சூட்டப்பட்டதாம்—இவரைக் கலக்காமல் அந்தப் பெயரை வைத்துவிட்டார்களாம்—இவரைக் கேட்டிருந்தால் வைக்க வேண்டாமென்று சொல்லியிருப்பாராம் — கேட்காததால் சொல்லவில்லையாம்—வைத்தாகிவிட்டதாம் — இப்போது மாற்றவேண்டியதில்லையாம்—கூறுகிறார், ஆச்சாரியார். அவருடைய கூரிய மூளை, இந்தச் 'சிறு விஷயத்தில்' ஏனிப்படி, திரிந்துபோய்விட்டதென்று எமக்குப் புரியவில்லை! நாட்டின் 'காவல்காரரான' இவர், அப்போதே தடுத்திருக்கவேண்டும் — அதுதான், செய்யவில்லை; அதற்குள் ராஜினாமா செய்ய நேர்ந்தது. பிறகு, இப்போது நாடாளவந்தாரே — அன்று மறந்ததை மக்கள் மன்றம் நினைவூட்டியபோதாவது, செய்தாரா? சித்தபேதமில்லாதவன், நடுமாடத்துக்குள் நாகலிருப்பதை வீட்டார் சுட்டிக்காட்டியதும், எடுத்து வீசியிருக்கத்தானே வேண்டும்! வீச, அசிங்கப்பட்டால், அப்பணிபுரியும் தோட்டத்தொழிலாளியிடமாவது சொல்லி, அகற்ற வேண்டியதன்றோ, ஆட்சிப் பாரத்தை மக்களுக்காகச் சுமக்கிறேனென்று சொல்பவரின், கடமை? செய்தாரா! ஏன், செய்யவில்லை? செய்யாதது மட்டுமன்றி, அதனைச் செய்ய முயன்ற நம்மையும், எத்தனைச் சித்திரவதைக்காளாக்கிவிட்டார்! 'என்னால்தான் முடியவில்லை—எனக்கும் பிடிக்காதபோர்டுதான் அது—நீயே மாற்று'' என்று விட்டிருக்கலாமன்றோ? காவல்காரன், வீட்டாரை, தடிகொண்டுதாக்கி, கட்டாரி கொண்டு குத்தியதுபோலல்லவா இந்த நாட்டின் காவலர், நம்மனோர்மீது, துப்பாக்கிகளை நீட்டி, துளிர்க்கும் வயதினரான இரண்டு வாலிபர்களை, பிணமாக்கித் தந்தார்! ஏராளமான தோழர்களின் உடலுறுப்புகளை, அறுந்துபோகும்படிச் செய்தார்!! அது போதாதென்று, அந்தக் காரியத்தில் ஈடுபட்ட தோழர்கள் கண்ணதாசன், தர்மலிங்கம்போன்றோரையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி, தண்டனை வாங்கித் தர தவியாய்த் தவிக்கிறார். முன்னுக்குப் பின் முரணாகவும், தன்னிஷ்டம்போல் பேசியும்—ஆடியும் திரிபவனை, பித்தன் என்று சுலபத்தில் சொல்லிவிடலாம். இவர், பெரியவர். என்னவென்று சொல்வது, இவரை! பயஜாரத்தால்—உளறுகிறாரா? அல்லது, 'கல்கி'யின் உறவாடல், சித்தத்தைச் சீரழிக்கிறதா?

அன்பர் ஆச்சாரியார், எந்தவிதக் கருத்தில் கூறினாலும் சரி, இவரது அரசாங்கம் எத்தனை முக்காடுகள் போட்டுக்கொண்டு மறைத்துக் கொண்டாலும் சரி, திருச்சி பக்கம் செல்லுவோர் யாவரும் பார்க்காமல் செல்வதில்லை — 'பளிச்' 'பளிச்' சென்று 'கல்லக்குடி' எனும் செந்தமிழ்ப் பெயர் விளங்கிக்கொண்டிருப்பதை. 'மாற்றுவது தேவை இல்லை' என்று இவர் சொல்லலாம் — 'இவர்கள் கேட்பதாவது! அதை நாம், செய்வதாகக் காட்டிக்கொள்வதாவது!! எனும் பதவி போதையில். ஆனால், அவரது ஆணவத்துக்கு, மக்கள் மன்றம் அளித்த பதில் அங்கே காட்சி தந்துகொண்

(10-ம் பக்கம் பார்க்க)

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரிலீடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 20—12—53 [ஞாயிறு

இதற்குத்தானா!

"ஆபத்திலிருந்து தப்பிய உங்களைக் காண சந்தோஷப்படுகிறோம்" — இவ்வண்ணம், டில்லியிலிருந்து திரும்பிய காங்கிரஸ் தலைவர் காமராஜரை, அவர்தம் நண்பர்கள் வரவேற்றனராம் 'ஆபத்து' என்று அவர்கள் குறிப்பிட்டது, சென்னைப் பிரச்னையை அல்ல—நாகபுரியில் விழுந்து சுக்குநூறான விமானத்தில் வரவிருந்த காமராஜர், மறுநாள் புறப்பட்டதால், தப்பினார் என்பதால் ஏற்பட்ட மகிழ்ச்சி அவர்களுக்கு. உண்மையில், மகிழ்ச்சியும், மனஆறுதலும் அளிக்கக்கூடிய விஷயம்தான், இது!

நண்பர்களின் உள்ள மகிழ்ச்சியையும் அன்புப் பெருக்கையும் கண்ட காமராஜரின் முகத்தில், அகத்தின் விசாரம் தென்பட்டதா! பெருமூச்சு தொடர்ந்து வெளிப்பட்டதா!-என்பதை, எந்த நிருபரும் தெரிவிக்கவில்லை. எனினும், வெற்றிமாலை சூடப்போய், விசாரச் சுமையுடன் திரும்பிய அவர், திராவிடத்தின் மண்ணில் கால்வைத்தபோது, என்னென்ன எண்ணியிருப்பார் என்பதை 'சென்னை' அறியும்! நண்பர்கள், வாழ்த்தையும் மகிழ்ச்சியையும் கூறியபோது, விருதுநகர் வீரரின் உள்ளம், எவ்வளவு வேதனையை அடைந்திருக்கும் என்பதை, நாடு நன்றாக அறியும்! நாட்டின் கண்கள், சென்னை மாநிலத்தில் நடைபெற்றுவரும் அரசியல் நிகழ்ச்சிகளால், மிக மிகக் கூர்மையாகியிருக்கின்றன. நீதியும் நேர்மையும் எப்பக்கம்! பாசமும் பற்றும் யார் பக்கம்!—என்பதை, மிக மிகத் தெளிவாக உணரும், நாடு.

நண்பர் காமராஜர், புது மணக்கோலம் பூண்டவர்போல புறப்பட்டார், டில்லிக்கு! விசாரமெனும் பூணாரம் பூண்டவராகத் திரும்பியிருக்கிறார், சென்னைக்கு! திரும்பியதும், தியாகராய நகரிலுள்ள ஆச்சாரியார் இல்லத்துக்குச் சென்று, அவருடன் உரையாடிக்கொண்டிருந்தாராம் வருக! வருக!—என்று ஆச்சாரியார் வரவேற்றிருக்கலாம், காமராஜரை. ஆனால், அந்த வரவேற்பிலும் – வழங்கிய வார்த்தைக் கூட்டத்திலும் — தொனித்த ஏளனத்தை, கெக்கலிப்பை, காமராஜர் உணராமலிருந்திருக்க முடியாது! 'வீரன்போல் போனாயே? பார்! ஜெயித்தது, நீயா—நானா?" என்று ஆச்சாரியார் கேட்டிருக்க வேண்டாம். இவரைப் பார்த்து 'வா! வா!' என்பதற்குமுன், இலேசான புன்சிரிப்பை வீசியிருப்பார்—அது போதும்! அது, ஆயிரம் ஈட்டிகளைவிடக் கொடுமையானது. 'என்னை என்ன செய்யமுடியும் உன்னால்? காங்கிரஸ் தலைவன் நீ! ஆனால், நான்...? நேருவின் நண்பன்! டில்லியாரின் புகழுக்குப் பாத்திரமானவன் உன்னிடம், நீதியும் கட்சியும் இருக்கலாம் அவையல்லப்பா இப்போது பெரிது. அன்பும்! நேசமும்! அது உனக்குக் கிட்டாது" என்று அந்தப் புன்சிரிப்பு கூறியிருக்கும். காமராஜர், அதனை எவ்வண்ணம் சகித்தாரோ? எப்படி அவர் இகடம் தாங்கிக்கொண்டதோ! வீரர்கள், வீணர்களின் காலடியில் வீழ்ந்து மடிந்ததற்கு, சரிதங்களிருக்கின்றன. ஒரு கட்சித் தலைவன், கட்சிக் கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்ட தன் கட்சிக்காரனிடம் தண்டனிட்டதற்கு, சரிதம் எதுவும் கிடையாது. ஆனால், தமிழகக் காங்கிரசில்மட்டும், அடிக்கடி அந்தச் சம்பவம் நடைபெறுகிறது.

ஆச்சாரியாரைக் காமராஜர் சந்தித்த அன்று சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டம், சென்னை, 'ராஜாஜி மண்டபத்தில்' நடைபெற்றதாம்:— காமராஜரும் சென்றிருந்தாராம் — வெளியே திரளான மக்கள் கூடிக் கிடந்தனராம்—ஆனால், வழக்கம்போலவே கட்சிக் கூட்டம் நடைபெற்றதாம் — எதிர்பார்த்தபடி கட்சிக்குள் எவ்வித 'கலவரமும்' நடைபெறவில்லையாம். பெருமூச்சோடு, செய்தியை வெளியிடுகிறது, மித்திரன்! உற்சாக ஓசையைக் கிளப்புகிறது, தினமணி!! இந்தச் செய்திகளைக் காணும் காமராஜர், வெளியே திரண்டிருந்த மக்கள் கூட்டத்தைக் கண்டபோது, என்ன எண்ணியிருப்பார்? அவர் வேண்டாம்—மக்கள் கூட்டம்தான், அவரைப்பற்றி, என்ன எண்ணியிருக்கும்! அப்பப்ப—கடந்த சில மாதங்களாக தமிழ்நாட்டு அரசியல் வானில் மின்னிய செய்திகள், ஒன்றா, இரண்டா? காமராஜ் காங்கிரசிலிருக்கும் திராவிட கழகத்து ஆள்!—'கல்கி' கும்பல், இவ்விதம் திட்டிற்று. 'ராஜாஜி' பஜனைபாடிடும் பக்தர்கள், சென்னை திருவல்லிக்கேணியில் காங்கிரஸ் கூட்டத்திலேயே புகுந்து கலாட்டாசெய்தார்கள் — டாக்டர் வரதராஜலு அறிக்கைமேல் அறிக்கை விடுத்தார் —'இதோ, புறப்பட்டுவிட்டார், காமராஜ்!' என்றார்கள்—டில்லியிலிருந்து திரும்பிய ஆச்சாரியார், 'நான்தான், ஆள்வேன். கலவரக்காரர்களின் மண்டையில், காங்கிரஸ் மேலிடம் நன்றாகக் குட்டியிருக்கிறது' என்றார்—குமுறினர் எம். எல். ஏ-க்கள்—மூவர், கிளம்பினர், வீராவேசத்தோடு—அந்த மூவரும் காமராஜரும், 'மூக்கறுபட்டோர்'களாகத் திரும்பியிருக்கின்றனர்! இது, சாதாரணமான சம்பவமா? 'இந்திய கவர்னர் ஜனரல்—வங்கக் கவர்னர்—ஆண்டவன் அவதாரம்—கலியுக பரமாத்மா—பெரிய ராஜதந்திரி—என்றெல்லாம் போற்றப்படும் ஆச்சாரியாரையே, நான், என்ன பாடுபடுத்திவிட்டேன்—தெரியுமா?' என்று, காமராஜர், கூற முடியும்! காங்கிரசிலிருக்கும் காத்தானும் முத்தனும் வேண்டுமானால், 'மூக்கறுபட்டதை மூடி மறைக்க' இவ்விதமெல்லாம், இனிப் பேசலாம். ஆனால், ஆச்சாரியாரின் முன் காமராஜர்தோற்றார்! உண்மை. தோல்வி, உள்ளத்தைத் துளைக்கக்கூடியதென்றாலும், மறக்க முடியாத ஒன்று. 'கல்கி'யும், 'தினமணி'யும்,

'மித்திரனும்' பிறவும், இந்த விஷயத்தில், காட்டிய உற்சாகத்தைக் காணும்போது, உள்ளம் வெதும்பும் இனத்தவருக்கு, எரிச்சல் மிகத்தான் செய்யும். என்னசெய்வது? பாம்புகளோடு பழகினால், என்றாவது ஒருநாள், அவை கடிக்கத்தானே செய்யும்! சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தின் முடிவைப் பற்றி, தலையங்கம் தீட்டிடும் 'தினமணி', 'நடந்தவை கனவு போலாகிவிட்டும். இனியாவது, நல்ல காரியங்களில் ஈடுபடுவோம்' என எழுதுகிறது. இத்தனை நாட்களாக நடந்த 'குருக்ஷேத்ரம்' கனவாகிவிட்டுமாம்! ஏனெனில், ஆச்சாரியார் காப்பாற்றப்பட்டுவிட்டாரல்லவா? அதிகாரத் தேர் ஓட்டுமே! எனும் ஆசை. ஆனால், அவ்வளவு எளிதில், மறக்கக்கூடிய வீழ்ச்சியா, இது. 'அவ்வளவு சாதாரணமானதென்றால்' இத்தனை மாதங்களாக நடைபெற்று வந்த ரகளைகளுக்கெல்லாம், என்ன அர்த்தம்? சாதாரண ரகளையா! அப்பப்பா — சந்தியெல்லாம் சிரித்ததே!!

இந்த 'வடு' — என்றும் மறையாது. இன்று வேண்டுமானால், நமக்கெல்லாம் தெரிந்துவிடக்கூடாதே என்பதற்காக, தோல்வியை மறைக்க காமராஜரின் சகாக்கள், பற்பலசொல்லக்கூடும். "ஆச்சாரியார் ஜெயித்தார்? அது வெறும் கனவு! அவர் ஜில்லாபோர்டுகளை ஒழிக்க வேண்டும் என்று கொண்டுவந்தார் — நாங்கள் உடனடி ஜில்லாபோர்டு தேர்தலை நடத்தும்படியும், பிறகு ஜில்லாபோர்டுகளை அழிக்கலாமென்றும் செய்துள்ளோம். இது, அடிநம்பர் 1! பிரதேசகமிஷனர்களை நியமித்து ரெவினியு போர்டைக் கலைக்க வேண்டுமென்றார், அவர். கூடாது-ரெவினியு மெம்பர்களுக்கு வேண்டுமானால் அந்தப் பொறுப்புகளை வழங்குங்கள் — என்று கூறிவிட்டோம் இதனால் அவருடைய எதேச்சாதிகாரத்தை ஒடுக்கிவிட்டோம்! மமதையில் மண்ணையள்ளிப் போட்டிருக்கிறோம்!'' என்று கூறலாம். இவை கட்சிப் பெயரைக் காப்பாற்ற முயலும் கண்ணியவான்கள் என்ற பட்டத்தை வேண்டுமானால், அவர்கள் பெற உதவுமே யொழிய, உண்மையை நாடு நன்றாக அறியும். தகராறையும் தோல்வியையும் பூசி மெழுக இப்புது விளக்கங்கள் பயன்படக்கூடும் — ஆனால், புரையோடிவிட்டபுண், என்ற உண்மையை மறைக்க எவராலும் முடியாது. ஏனெனில், ஆச்சாரியாரைச் சீர்திருத்தம் செய்வதற்காகவல்ல, இத்தனை மாதங்களாகக் கூடாரத்துக்குள் 'குத்துவெட்டு' நடைபெற்றது!

அவரை வெளியேற்றிடவேண்டும் இதுதான் முழக்கம்.

அவர் கட்சியைக் கலக்காமல் மந்திரிகளை நியமித்தார் — இதற்குப் பரிகாரம் தேடவேண்டும்.

அவர் கொண்டுவந்த புதுக்கல்வித் திட்டம் ஒழிக்கப்படவேண்டும் — மறுத்தால், அவர் விலக்கப்படவேண்டும்.

இந்த எண்ணங்களே காங்கிரஸ் கூடாரத்துக்குள் கடலலைபோலக் கேட்டுக்கொண்டிருந்தது இவை யாவும், முற்றுப் பெறவில்லை — இருந்தவர் எப்போதும் போல, இருக்கிறார்! 0001 நம்பர் போட்ட புதுக் காரில் சர்க்கார் சிப்பந்திகள் பவனிவர உல்லாசமாகச் சென்ற வண்ணமே இருக்கிறார்! அவரது தம்பட்டம் 'கல்கி' கடந்த வாரம்கூட காங்கிரஸ் எம். எல். ஏக்களை சபித்தபடிதான் இருக்கிறது! எனவேதான், விருதையாரும் சேலத்தாரும், வரிந்து கட்டிக்கொண்டு செய்த அத்தனை முயற்சிகளும் தோற்றுவிட்டதென்போம். தோல்விக்குக் காரணமென்ன? ஆச்சாரியாரை எதிர்த்தோரிடம் நேர்மையான போக்கும், நியாயமும் இல்லையென்பதாலா? — எவரும், கூறமுடியாது! கட்சியினரெல்லாம் ஆச்சாரியாரை விரும்புகிறார்களா? அதுவும் இல்லை! எப்பக்கம் திரும்பினும் காங்கிரஸ் கூடாரத்துக்குள், 'ஆச்சாரியார் வேண்டாம்!' என்ற முழக்கம்தான். அதுமட்டுமின்றி ஆட்சிபீடம் ஏறியது முதல் தன் வகுப்பாருக்கே வசதியும் வாழ்வும் வழங்கிவரும் ஆச்சாரியாரின் சுயநலத்தைப்பற்றி, அவரை முன்பு ஏற்றிப்புகழ்ந்து ஸ்தோத்தரித்தோரெல்லாம், சொல்லுகின்றனர். அவரின் அடாபிடிகள்! வணங்கிச் சேட்டைகள்! கட்சியிலிருப்போருக்கே, சகிக்கமுடியவில்லை. தமிழாமட்டுமல்ல — தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கட்சியே, அவரை, விரும்பவில்லை! அதனால்தான் காமராஜரும் பிறரும் கச்சை கட்டிக்கொண்டு கிளம்பினர்—85 எம் எல். ஏக்களும் கையெழுத்திட்டுத் தந்தனர். எனினும் காமராஜர் தோற்றார்! ஆச்சாரியார் பதவி பீடத்திலிருந்தபடி, நாட்டையும் தன்னை மிரட்டமுயன்றவர்களையும் பார்த்து விலாநோகச் சிரிக்கிறார்!!

எப்படி முடிந்தது, இது? டில்லியெனச் சென்ற காமராஜர், பூனைபோலத் திரும்புவானேன்! சிறுத்தைபோல சீறிச் சென்றமூவர், அழுத்த முகத்துடன் வருவானேன்!! அங்குதான் இருக்கிறது ஆச்சாரியார் நம்பியிருக்கும் 'வடநாட்டு உதவி! அதனால்தான், டண்டிதர், கண்டனக் கணைகளை வீசியிருக்கிறார், ஆச்சாரியாரை அகற்றுவோர்மீது. "ஆச்சாரியாரே நீடிக்க வேண்டும்!'' எனவும் அதிகாரக் குரலுடன் கூறியிருக்கிறார். அக்குரல், தமிழ்நாட்டின் நிலைமை—நேர்மை—குமுறலை—ஏளனமாக்கிவிட்டது! பாமர மக்களின் உள்ளத்தை அரிக்கும் ஒரு பிரச்னையில் இவ்வளவு ஊக்கம் காட்டுவானேன், காங்கிரஸ்காரர்கள்? இன்று, 'எங்கோயிருக்கும்' ஒரு குரல் அதட்டியதும், விசாரச் சுமையுடன் விதவிதமான வியாக்யானங்களுடன் வெளியில் உலவுவானேன்! நாட்டுமக்களென்ன, இவர்களது ஆட்டக்காரர்களா? கடந்த சில மாதங்களில ஆச்சாரியாரின் அட்டகாசத்துக்கு இரையான தமிழக மக்களுக்கு, காமராஜரும் அவரது சகாக்களும் வழங்கிய 'நம்பிக்கை'— ஒரு குரலின் அதட்டல் கேட்டதும், நலுங்கிக் குலுங்கிச் சரிவதென்றால், இதனை என்னவென்றுரைப்பது! 'டில்லி செல்கிறார் காமராஜர்' என்றதும், தமிழக மக்கள், 'அப்பாடா! தீர்ந்தது'. என்றன்றோ எண்ணினர். அந்தளவுக்கு நம்பிக்கையூட்டும்படி நாளும் பக்கங்களிலும், முரசம் எழுப்புவானேன்! இன்று நடுங்கி, நாதியற்ற அனாதையைப்போல, ஆச்சாரியார் வீடு தேடி ஓடுவானேன்—கட்சிக் கூட்டத்தில் கட்டுப்பட்டிருப்பானேன்—ஆச்சாரியார் விலா நோகச் சிரிப்பது கேட்டு, தலையைக் கீழே போட்டுக்கொள்வானேன்!

தமிழர்களின் வீரப் பரம்பரைக்கு களங்கம் விளைவிக்கக்கூடிய அளவுக்கு, வேதனையையும் சோதனையையும், சகிக்குமளவுக்கு நமது காங்கிரஸ் சகோதரர்களுக்கேற்படும், 'கதி'யைப் பார்த்து, உண்மையில் கண்ணீர் வடிக்கிறோம்! செச்சே! — இதற்குத்தானா, இவ்வளவு நாட்களும் இவர்களெல்லாம், பாடுபட்டது!! ✻

அரசியல் நாகரீகமா?

பதினெரு மாதம் தண்டனை பெற்று, சிறைக்குள் கிடந்த அசோக்மேத்தா முதலிய சோஷியலிஸ்டுகளை, பம்பாய் சர்க்கார், இந்த வாரம் விடுதலை செய்திருக்கிறது.

அவர்களை விடுதலை செய்யுமாறு, 'டில்லி பீடமே' விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டதாம். டில்லிபீட மட்டுமின்றி, அந்தப் பீடத்தையே நம்பி வாழும் 'கல்கி'யாரும், கடந்த வாரம் தன்னுடைய ஏட்டில், அவர்களை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி எழுதினர்—'அவர்களை விடுதலை செய்வதே விவேகம்' என்று தீட்டினர்.

பம்பாய் மாகாணத்தில் சிறையுண்டோர்மீது, கீழ்ப்பாக்கத்திலிருக்கும் ஏட்டுக்கு, அன்பும் ஆர்வமும் கரை புரண்டோடுகிறது. ஆனால், தான் வாழும் நாட்டில் — தன்னை வாழவைக்கும் ஒரு சமுதாயத்தில்— பலர் சிறைக்கு அனுப்பப்பட்டதையும், சிலர் உயிரிழந்ததையும் குறித்து—கண்டனக் குறிப்பல்ல; அனுதாபம்கூட எழுத முன்வரவில்லை.

டில்லிக்கு, தென்னாட்டினர்மீது கவனம் இல்லாமலிருப்பது வியப்புக்குரிய விஷயமல்ல! பழைய தொடர் கதை. தலைவர்கள் சிறைக்குள் கிடக்கும்போது, டில்லித் தலைவர் நம்மையெல்லாம், 'நாட்டு மிராண்டி' என்றுகூட செப்பினர். இது, அவர் வழக்கம். ஆனால், இங்கேயிருக்கும் ஏட்டுக்கு, ஏனிந்த மறதி—அலட்சியம்? எங்கோ யிருக்கும் பர்தி சத்தியாக்கிரகத்தைப் பற்றித் தீட்டத் தெரிகிறது! அதில் சம்பந்தப்பட்ட வீரர்களை விடுவிப்பதே விவேகம் என்று அறிவுரை வழங்கவும் புறப்படுகிறது. ஆனால், தன்னுடலில் ஓடும் ரத்தமும், தன்னுடைய தசைகளும் — வளரவும் வாழவும் வழி செய்யும் மண்ணின் உரிமைக்குரலை எண்ணிடவும், மனம் துணியவில்லை. அவ்வளவு மருட்சி! அத்தனை ஆத்திரம்!!

*

இந்த மருட்சியும் ஆத்திரமும் நம்மீது, 'கல்கி'க்குமட்டுமல்ல; அவரது குருநாதருக்கும், கூட்டத்துக்கும் அதிகமாகிக் கிடக்கிறது. ஏடுகள் யாவும் தம்முடையதென்பதால் இதனை, சமயம் நேரும்போதெல்லாம் வெளிப்படுத்திக்கொண்டே உள்ளன. வாழவைக்கும் பூமியின் பிரச்னைகளை, பித்தனும் மூடிவைக்க விரும்பான். ஆனால், இவர்கள், அப்பிரச்னைகளை மட்டந்தட்டுவதும் — கேலிபேசுவதும்—திமிரோடு நடந்துகொள்வதுமே, தங்களுடைய கடமையெனக் கருதுகின்றனர். இந்தளவுக்கு, ஆத்திரமும் ஆவேசமும், நம்பால், பொங்கக் காரணம் என்ன? இவர்களை இந்நாட்டில் விட்டு வைக்கக்கூடாதென்ருமா! அல்லது, இவர்களைக் கண்ட இடத்திலெல்லாம் கல்லாலடித்து விரட்டுகிருமா! மனிதப் பண்போடு, இவர்களையும் மனிதர்களாக்க விரும்பும் குற்றம் தவிர, வேறேதும் செய்தோமில்லை. எனினும், சீற்றம் வருகிறது இவர்களுக்கு. தீட்டுகின்றனர், வெளியிடத்து விவகாரங்களைப்பற்றி! டில்லித் தலைவரும், 'தன் பூமி'யின் பக்கம் நடைபெறும் விஷயங்களையே, சிரத்தையோடு நோக்கி, நடவடிக்கைகளை எடுக்கிருர். அசோக் மேத்தா முதலியோரை விடுதலை செய்ததுகுறித்து பண்டிதருடைய பரந்த மனப்பான்மையையும், ஜனநாயகநேர்மையையும், இனி எடுத்துச்சொல்வார்கள், ஏடு தாங்கிகள். அந்த பரந்த மனப்பான்மையும், ஜனநாயக நேர்மையும், பம்பாய்க்குப் பயன்பட்டதே ஒழிய—சென்னைக்கு அல்ல. இங்கே, தண்டனை அனுபவித்து வெளியே வந்த தி. மு. க. முன்னணி வீரர்களை, மீண்டும் சிறைக்குள் அனுப்பத் திட்டம் தீட்டுகிருர், ஆச்சாரியார். அரசியல் நாகரீகத்துக்கே ஒவ்வாத செயல் என்கின்றது, அறிவுலகம். இதனைப் பற்றி, பண்டிதரின் அகில உலக ஜனநாயகப் பார்வை, எத்தகைய பரபரப்பும் கொள்ளவில்லை. ஏனெனில், இது, நாம்—அது, அவர்கள்.

இந்த மனோபாவத்துடன் வாழும் கும்பல்தான், நமது இன்பபூமியை, வாழவைக்கும் கூட்டமாம்! இந்தகைய சுபாவம் கொண்டோரின் தலைவர்தான், இன்பத் தாயகத்தின் துன்பக் கண்ணீரைத் துடைக்கப் பாடுபடும் ஜோதியாம்!!

வேலூரில்!

ஐவருக்கு வரவேற்புக் கூட்டம்

27-12-'53 மாலை

கோட்டைவெளியில்

சி. என். எ, நெடுஞ்செழியன், சம்பத், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன், ஆகியோருக்கு வரவேற்பு விழா. அனைவரும் வருக!

ஏ. எல். கிருஷ்ணசாமி,
வ. ஆ. மா. செ.

தூத்துக்குடி நிதியுடன் எல்லா கிளைக்கழகங்களும் வருக!

7-ம் பக்கத் தொடர்ச்சி

டிருக்கிறது! அன்று ஒட்டிய பெயர்த்தாள் பழையதாகியிருக்கலாம்—இதோ! புதுத்தாள், அச்சடித்து அனுப்பியுள்ளோம். வேண்டுமானல் உபயோகப்படுத்திக்கொள்ளுங்கள்'' என்று இங்கேயுள்ள கழகத்தோழர்கள், அல்ல; இவர்கள்தான் தூத்துக்குடி நிதிக்குப் பணம் சேகரித்துக்கொண்டிருக்கிருர்களே—நாமும் இந்த உதவியைச் செய்வோம் எனும் கருத்தில் — ரங்கூனிலிருக்கும் கழகத்தோழர்கள், ஏராளமான தாள்களை, அச்சடித்து அனுப்பியிருக்கிருர்கள்! ஆச்சாரியார் அரசாங்கம், 'முடியாது' என்று கூறலாம். ஆச்சாரியார் தனி நபர்! அவர்கூட இருக்கும் சகாக்கள் — அதிகமாக எண்ணிஞல், ஒரு டஜன்தான்!! ஆனால், மக்கள் மன்றம் மிகப் பெரியது — கோடிக்கணக்கான இலட்சிய உருவங்களைக்கொண்டது. அது 'டால்மியாபுரத்தை' 'கல்லக்குடியாக' ஆக்கிவிட்டது! அதனால்தான், அப்பக்கம் செல்லவும், அஞ்சுகிறது — அரசாங்கம். இது, எத்தகைய வெற்றி! இந்த வெற்றியைப் பெற்றுவிட்டோர், தமிழ்எழுத்தைக்கண்டு அகமகிழ்ந்துகொண்டிருக்கையில், இந்த 'அரசியல் சூதர்' ஆயிரம் சொன்னலென்ன! அர்த்தமின்றி மொழிந்தாலென்ன!!

பலிபீடத்தில், உதிர்ந்த 'மலர்!'

கசக்கி எறியப்பட்டுவிட்டது!—புதுப் பொலிவுடன் பரிணமித்த பூரண கர்ப்பவதியான, அவள் வாழ்வு, கசக்கி எறியப்பட்டுவிட்டது!!

காதலன் துடித்தான்—குடும்பத்தார் அலறினர்—அந்த இளமங்கையின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்துகொண்டேயிருந்தது. அவள் இறந்தாள்!—அல்ல! அல்ல!!—சாகடிக்கப்பட்டாள்.

அவள் கொலைக்கு வேறுயாரும் காரணமல்ல. நள்ளிரவில் புகுந்த திருடனோ, குடும்ப விரோதம் கொண்ட எதிரிகளோ, அல்ல—அவள், சாவுக்குக் காரணம். 'அன்பே! அன்பே" என்று ஆசைதீர அழைத்து மகிழ்ந்த ஆருயிர்க் கணவன் — 'செல்லமே! எங்கள் குறைத்தீர்க்க வந்த குடும்ப விளக்கே!' என்று போற்றிய குடும்பத்தார் — ஆகியோரால், அவள், சாகடிக்கப்பட்டாள். விரோதமல்ல, காரணம்; அன்பு!

அந்த அன்பின் விளைவால்' சொந்த மருமகளை, சாகடித்துவிட்டார்கள். அவளின் வாழ்க்கையை இன்பமயமாக்க வேண்டுமென்ற கருத்தில்! அவளுக்குப் பச்சிலை கொடுத்து, கொன்றுவிட்டார்கள். பூரண கர்ப்பவதி, அவள், சிசுவும் அவளும் சேர்ந்து, சாகடிக்கப்பட்டனர்!

*

இவ்விதம் கடலூர் நீதிமன்றமொன்றில், அண்மையில் ஒரு வழக்கு நடைபெற்றிருக்கிறது. குற்றம் ருஜுவாகவில்லையென்று, எதிரிகளனைவரையும் நீதிபதி, விடுதலை செய்திருக்கிறார். வழக்கினுள் நுழைவதல்ல, நம் நோக்கம்—ஆனால், வழக்கிற்கு காரணமான நிகழ்ச்சியை, நாட்டோர் முன்வைக்க விரும்புகிறோம்.

புதுமை எண்ணங்கள் மலர்ந்துவரும் இந்நேரத்தில், பழமையுள்ளங் கொண்டோர், தோள் தட்டி, ஆர்ப்பரித்து, ஆங்காங்கும் கிளம்பியிருக்கின்றனர்.

மத நம்பிக்கை ஏற்படவேண்டும்! நாகரிகமோகம் போகவேண்டும்! இந்த மதச் சம்பிரதாயங்கள் நழுவாமல் நாடெங்கும் பாதுகாக்கப்படவேண்டும்!—இவ்வண்ணம், சனாதனிகள், சங்கநாதம் செய்யத் தலைப்பட்டிருக்கின்றனர். இந்துமதத்தைப் புனருத்தாரணம் செய்யும் நோக்கில், 'குன்றக்குடி' என்பவர், காரிலேறி, கனவேகமாகப் பறந்து சென்று, ஆங்காங்கும், 'அவன்' பெருமை குறித்தும் 'அவனை' அடையும் வழிகுறித்தும், பிரசங்கங்கள் புரிந்து வருகிறார். காஞ்சி காமகோடி பீடாதிபதியெனும் பெரும் பெயர் பூண்ட சங்கராச்சாரியார்—தனது குதிரை, ஒட்டகம், பல்லக்கு, வண்டி, யானை முதலிய சேனா சைன்யங்களோடு—காஞ்சியில் 'தண்டு' இறங்கி, ஆங்காங்கும் மதப் புனருத்தாரண வேலைகளில், ஈடுபட, சேனை திரட்டுகிறார். திவ்விய பிரபந்தங்கள்—புராணக் கதைகள் — தத்துவவிளக்கங்கள் — சன்னிதானப் பெருமைகள் — ஆகியவைகளைத் தினசரி பரப்புவதே தமது கடமையென பத்திரிகைகளும், பணிபுரியத் துவங்கிவிட்டன. போதாக்குறைக்கு அருமந்த ஆச்சாரியாரும், இந்த, அரும்பணி'யின் பெருமையையே ஆங்காங்கும், முழக்கமிடச் செய்கிறார்! அவரது ஆட்சியிலிருக்கும் இந்துமதப் பரிபாலன போர்டோ, முன்னைவிடப் பன்மடங்கு, ஜரூராக, பக்திப் படைகளைத் திரட்டும் பணியிலீடுபட்டு வருகின்றனர். இவ்வளவு ஆயத்தங்களும்—ஆர்ப்பாட்டங்களும்—எதற்கு? இந்து மத சம்பிரதாயம் சீர்குலைகிறதாம் —அதைக் காப்பாற்றவேண்டுமாம்! மக்கள் அநாசார வழிகளில் புகத் தலைப்பட்டுவிட்டனராம்—அதனைத் தடுக்க வேண்டுமாம்! ஆண்டாண்டு காலமாக இருந்துவரும் புராதனக் கொள்கைகளை மீண்டும் உயிர்ப்பெற்றெழச் செய்யவேண்டுமாம்!

'கடவுள்' பெயரை நம்பி வாழும் சங்கராச்சாரிகளும், சன்னிதானங்களுமட்டுமல்ல, இன்று அமெரிக்கா—நாளை ஆஸ்திரேலியா —மறுநாள் பிரான்ஸ் — என்று அனுதினமும் ஆகாய விமானத்திலேயே பறந்துகொண்டிருக்கும் சகலகலா பண்டிதரெனக் கூறப்படும் சச்சிவோத்தம சர். சி. பி. அய்யர் முதல், சர். எஸ். வரதாச்சாரி உள்பட, சகலரும் கூறுகின்றனர்—"இந்தியப் பண்பாடுகளைக் கட்டிக் காத்துப் போற்ற வேண்டும்" என்று. இந்தப் பண்பாட்டுக்கு, அமெரிக்காவில் அமோக யோகமிருக்கிறது! — இவ்வண்ணம், ஒருநாள் கூறுகிறார்கள். இந்தப் பண்பாட்டின்மீது ஆசை கொண்ட ஜெர்மன் மாது, இந்திய நாட்டுக்கு வந்துவிட்டார்! என்னே இந்தியப் பெருமை!! — என்கின்றனர், இன்னொர் நாள். 'தெரியுமா சேதி? மகா பாரதத்தையும் ராமாயணத்தையும் ரஷ்யாவில் மொழிபெயர்க்கிறார்கள்—அமெரிக்காவில் ஒரே கிராக்கி', இப்படிச் சொல்லுகிறார்கள், மற்றொர் நாள்.

அவ்விதம் கூறுவோர், இங்கு வந்து சென்ற 'மேயோ'வையும், 'பீவர்லி நிகோலசை'யும் மறந்துவிட்டனரேயென்றெண்ணும்போதுதான், நமக்கு சிரிப்பு வருகிறது! கடந்த ஆண்டு, அமெரிக்கஏடொன்றில், இந்து மதக் கடவுளாம் 'லிங்கத்தின்' மகிமை குறித்து அமெரிக்கர் ஒருவர், கட்டுரையொன்று தீட்டியிருந்தார். அந்தக் கட்டுரைக்கு இப்போது கவர்னராயிருக்கும் முன்ஷியார் மறுப்புகூட எழுதினார்! விஞ்ஞானத்திலும் புதுமைகளிலும் நாட்களைச் செலவழித்துக்கொண்டிருக்கும் அந்நியர்கள்கூட, நம் ஆச்சாரத்தின்மீது அபிலாஷைகள் கொண்டுவருகிறார்கள் — அப்படி இருக்கும்போது இங்கேயிருப்போர் என்னென்னவோ கூறுகிறார்களே!' என்று விலை போகாதசரக்குக்கு விளம்பரம் தேவைப்படுவதுபோல், அந்நியர் பெயரை இழுக்கின்றனர். இவர்கள் எவ்வளவு முயற்சிகளிலீடுபட்டாலும், தற்காலம் உலவும் சந்நிதானங்கள், தம்பிரான்களின் நிலைமைபற்றி ஊர் சிரிக்காமலில்லை. ஆத்மாவுக்கும் — பரமாத்மாவுக்கு

மிடையிலுள்ள பேதத்தை அகற்றும் பெருமுயற்சியிலா இந்த மதத் தூண்கள், ஈடுபட்டிருக்கின்றனர்? இல்லை! இல்லை!! ஆண்டவனின் பிரதிபிம்பங்கள் எனப்படும் பண்டாரச் சந்நிதிகளின் சீடர்கள்மீது, பலவிடங்களில் வழக்கு. எங்கெங்கு ஆயிரக்கணக்கான ஏகர்கள், ஆண்டவன் பெயரால் விளங்குகிறதோ, அங்கெல்லாம் வழக்கு. சிருங்கேரி மடத்தைப்பற்றி எல்லாத் தெய்வ பக்தர்களும், அறிவார்கள். அதற்கு ஏராளமான புஞ்சை நஞ்சைகள் உண்டு. அவைகளில் உழுது பயிர் செய்யும் ஏழைக்குடியானவர்களுக்கும் மடாதிபதிக்கும் வழக்கு! குடியானவர்கள்மீது குற்றம் சுமத்துகிறார், ஆண்டவன் தூதர். சொத்து சுகம் என்றதும், ஆலவாயப்பன் துணை தேவைப்படுவதில்லை—வெள்ளையன் வகுத்த சட்டத்தின் துணையை நாடுகின்றனர். எங்கே, மடத்தின் சொத்துக்கள்மீது, மக்கள் உரிமை கொண்டாட ஆரம்பித்துவிடுகின்றனரோ, எனும் அச்சம், ஆண்டவனின் லீலாவினோதங்களில் லயிக்கவேண்டிய ஆச்சார்ய ஸ்வாமிகளை, ஆட்டிப்படைக்கிறது—இதுபோது. சிருங்கேரியில் மட்டுமல்ல, குற்றாலத்தில் ஒரு சமமான வழக்கு. 'தத்தாத்ரியமந்திர்' எனும் மடத்தின் பீடாதிபதி என்பார் மடத்தின் மானேஜரை வேலையிலிருந்து விரட்டவேண்டுமென்று, வழக்குத் தொடர்ந்தாராம்! ஏனெனில், பீடாதிபதியின் விருப்பப்படி மானேஜர் நடக்கவில்லை. பீடாதிபதி இகலோக இச்சைகளில், ஈடுபடலாமா! மனித உயிர்களெல்லாம் மகேசன் பிம்பங்கள்தானே அவருக்கு? ஆனால், பீடாதிபதி ஆண்டவா! நீ கவனித்துக்கொள்' எனறு விடவில்லை கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்! திருவண்ணாமலையிலிருக்கும் ரமணரிஷியின் சொத்துக்களைப்பற்றி சமமான வழக்குகள், அடிக்கடி நடப்பதை அனைவரும் அறிவர்.

இங்ஙனம், சில பிரபுக்களை விட, பெரிய பிரபுக்களாக இந்த 'ஆண்டவனின் அடியார்கள்' வளரும் ஆபத்தை எடுத்துச் சொன்னால், அவர்தம் அடிவருடிகளும், அதனால் வயிறு வளர்ப்போரும் 'ஆச்சாரம் போகிறது! சம்பிரதாயம்போகிறது! புராதன பண்பாடுவேண்டும்!' என்றெல்லாம் தோள் தட்டிக் கிளம்புகிறார்கள். மக்கள் மனதில் புதுமையெண்ணங்கள் தோன்றுவது, ஆபத்தென அலறுகிறார்கள். மாறாமல் மறையாமல் — என்றென்றும் பழைமை மோகம் நீடிக்கவேண்டுமென விரும்புகிறார்கள்.

*

இந்தப் பழைமை மோகத்தின் விளைவாகத்தான், அந்தப் பூரண கர்ப்பிணி, சாகடிக்கப்பட்டாளாம்! அன்புக் கணவனும், அருமந்த சுற்றத்தாரும், உயிர்க்குயிரான தங்கள் செல்வத்தை பழைமையின்மீதுள்ள பற்றின் காரணமாக பிணக்குழிக்கு அனுப்பினராம். திண்டிவனம் தாலூகாவைச் சேர்ந்த சிறுவாய் கிராமத்தில், இந்தச் சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படும் விபரத்தைக் கேளுங்கள்.

அவள், பூர்ண கர்ப்பிணி—அவளுக்கு சித்திரை மாதத்தில் குழந்தை பிறக்குமென உற்றாரும் உறவினரும் கணக்குப் போட்டனர். சித்திரை மாதத்தில் குழந்தை பிறந்தால், அது குடும்பத்துக்கு அடுக்காது! — என்பது, அவர்தம் நம்பிக்கை. அதனால், தாமன் வீட்டில் துன்பங்கள் ஏற்படுமாம். என்ன செய்வது? — விழித்தனர், அவர்கள். கணவனுடன் கூடிக் கலந்து பேசினர்! கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தனர். எப்படியாவது அந்தக் குழந்தை பிறக்காமல் செய்துவிடவேண்டுமென்பதே, அம்முடிவு. அதன்படி, கர்ப்பத்தைக் கலைப்பதெனத் திட்டமிட்டினர். பெண் என் செய்வாள்! குழந்தை பிறந்தால் குடும்பமன்றோ சீர்குலையுமென்று செப்புகின்றனர். அழுத கண்ணீரோடு, சம்மதம் தந்திருக்கிறாள். அதன்படி, கர்ப்பத்தைக் கலைக்க, விஷ மூலிகை ஒன்று தந்திருக்கிறார்கள். மூலிகை, கர்ப்பத்தைக் கலைத்தது! அந்தக் கர்ப்பிணியின் உயிரையும் குலைத்தது!! —இதுதான், வழக்கில் கூறப்பட்ட விபரம்.

வீணான மூட நம்பிக்கைக்கு ஒரு இளமலரின் வாழ்க்கை, வெட்டி எறியப்பட்ட இந்தக் கோரத்தை, எங்கே காணமுடியும்? இதுபோன்ற மூட நம்பிக்கைகள்தான் நீடிக்க வேண்டுமாம்! இந்த மூட நம்பிக்கைகளைத் தழுவியபடி வாழ்வதுதான், புராதனப் பண்பாடாம்! இந்தப் பண்பாட்டை, அமெரிக்கரும் பிறரும் பார்த்து அதிசயிக்கின்றனராம்!! தோள் தட்டி, பணப்பையைத் திறந்து, பக்திப் படைதிரட்டி முஸ்தீபு செய்யும், இந்த மதத் தூண்களைக் கேட்கிறோம் — இந்த மூட நம்பிக்கைகள் ஒழிய என்ன செய்தீர்? இதுவரை எதுவும் செய்யவில்லையெனில், இனிமேலாவது என்ன செய்வீர்? அந்தப் பக்கம் சென்றால், நமது அடிப்பீடமே சாய்ந்திடுமோ எனும் பயத்தில், பலப் பலக் கூறி, மதமெனும் பலிப்பீடத்தில், நாட்டின் மலர்போன்ற மக்கள் கூட்டத்தைச் சாய்க்கத் திட்டமிடும் உங்களை, 'சதிக்கூட்டம்' எனப், பூத்துவரும் புதுயுகம் கூறினல்மட்டும், கோபம் வாலாமோ! மனிதர் தம் வாழ்வை உருக்குலைக்கும் பழைமை எண்ணங்களுக்கு எருவிட்டு வளர்க்க நினைக்கும் இந்த எத்தர்களை, என்னவென்று சொல்வது? திருப்பாவை—திருவெம்பாவை மாநாடும், சிவனார் பெருமை கூறும் உபன்யாசங்களும் செய்யும் ஆண்டவனடியார்களுக்கு, மண்ணாசையும் போகவில்லை! பொன்னாசையும் போகவில்லை!! அவைகளைக் கட்டிக் காக்க, சட்டமன்றம் ஏறியபடியே உள்ளனர். அதே நேரத்தில், தமது போகபோக்கிய வாழ்வு, பொசுங்கிடுமோ எனும் பயத்தில், அறிவொளி எழாது தடுக்கும் செயல்களிலும் ஈடுபடுகின்றனர். அறிவொளி எழாததால்தான், ஒரு குடும்ப மலர், அழிந்தது! — செத்தது!! இதுபோல, 'சாகும் கதை'கள், ஒன்றல்ல—ஓராயிரம். இந்தக் கேடுகளை வளர்க்கும் மூடநம்பிக்கைதான், பரம்பரை பண்பாடாம்! இந்தப் போலிப் பக்தர்கள் உரைக்கின்றனர்—அவர்களுக்கு அடி வருடும் சிலரும், ஆமாமெனத் தாளம் போடுகின்றனர். இந்த நடமாடும் 'ரஸ்புடீன்'களின் கொட்டமும் திட்டமும் ஒழியும்வரையில், நாட்டுக்கு நல்ல காலமில்லை.

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும்தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒருவாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்துப் படி (நகல்) எடுக்கப்பட்டவையாகவே காணப்படுகின்றன. எனவே, திருமாலுக்கும் அவர் திருவிறக்கங் (அவதாரங்)கள் என்று சொல்லப்படும் இராமன் — கிருட்டினன் முதலானவர்கட்குங் கடவுட்டன்மை கற்பிப்பதற்காகப் பத்த விசயம்—பாகவதம் — இராமாயணம்—பாரதம்-கீதை முதலான புராண இதிகாசங்களும்; சிவனுக்கும் அவர் புதல்வர்கள் என்று சொல்லப்படும் பிள்ளையார்—முருகன் முதலானவர்கட்குங் கடவுட்டன்மை கற்பிப்பதற்காகப் பெரியபுராணம்—விநாயகபுராணம் — கந்த புராணம்—சிவ ஞான போதம் முதலான புராண-சித்தாந்தங்களும் எழுதப்பட்டன என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

அன்றியுஞ், சைவசமயாசிரியர்கள் காலத்தில் ஒழிக்கப்பட்ட சமண மதம், அநபாயசோழன் காலத்தில் மீண்டுந் தலைதூக்கியதையும், அதனால் அநபாயன் என்ற சோழமன்னன் 'சீவகசிந்தாமணி' என்ற சமண மத நூலையே முதன்மையாகக் கருதிப் படித்து வந்ததையும், அதனாற் சைவமும், அதனைத் தங்கள் பிழைப்பிற்குக் கருவியாக வைத்துக்கொண்டிருந்த ஆரியர் செல்வாக்குங் குறைந்து வருதலையும் அறிந்தே, அக்காலத்துப் பார்ப்பனர்கள் சேக்கிழாரைத் தங்கள் கையாளாக வைத்துக்கொண்டு, சைவத்திற்கும் பார்ப்பனருக்கும் உயர்வு கற்பிக்கும் பெரியபுராணத்தைப் பாடும்படி செய்து, அநபாயன் என்ற சோழமன்னனையுந் தம்வயப்படுத்தினர் என்பதும், பெரியபுராணம் பாடியதற்குப் பிறிதொரு முதன்மைக் காரணமாகும். இனிப், பெரியபுராணம் பாடிய சேக்கிழார், சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையின் வழி நூலான திருவந்தாதியை ஆதாரமாகக் கொண்டு பெரியபுராணத்தைப் பாடியதாகப் பின்னர் சொல்லப்பட்டது. ஆனால் திருத்தொண்டத்தொகை சுந்தரராற் பாடப்பட்டதல்லவென்பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன.

இனிப், பார்ப்பனருக்கு உயர்வு கற்பித்து நன்மதிப்புக் கொடுப்பதற்காகவும், தமிழ்மக்களுக்குத் தாழ்வு கற்பித்து இழிவுபடுத்துவதற்காகவுமே பெரியபுராணம் பாடப்பட்டதென்பது அதிற் பேசப்படுங் கதைகளின் போக்கால் நன்கு தெளிவாகின்றது. எப்படியென்றால், பெரியபுராணத்திலுள்ள அடியவர்களின் அன்புப் பெருக்கைச் சோதித்து அவர்களை ஆட்கொள்ள வந்ததாகச் சொல்லப்படுஞ் சிவன், பார்ப்பன வடிவத்திலேயே வந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பெரியபுராணத்தில் வரும் அடியவர்கள் பல்வேறு வகுப்பினராய் இருந்தும், அவர்களிடம் வந்த சிவன், அந்தந்த வகுப்பினர்க்குரிய வடிவத்தை எடுத்து வராமல், எல்லாரிடமும் பார்ப்பன வடிவத்திலேயே வந்ததாகச் சொல்லப்படுவது எதைக் காட்டுகின்றது? பார்ப்பன வடிவமல்லாத வேறு வடிவத்தை எடுப்பது சிவனுக்கு இழிவாகும் என்பதையே காட்டுகின்றது. அற்றேல், குயவரான திருநீலகண்டரிடம் வந்த சிவன் ஒரு குயவனாகவும், வண்ணானை திருக்குறிப்புத்தொண்டரிடம் வந்த சிவன் ஒரு வண்ணானாகவும், செட்டியான இயற்பகையிடம் வந்து அவர் மனைவியைத் தமக்கு மனைவியாகப் பெற்றுக்கொண்டுபோன சிவன் ஒரு செட்டியாகவும், இன்னும் ஏனை அடியவர்களிடம் வந்த சிவன், அவரவர் வகுப்பிற்குரிய வடிவமுடையவராகவும் அன்றோ வந்திருக்கல் வேண்டும். அன்றியும், திருநீலகண்டரிடம் வந்த சிவன், ஒரு துறவியைப்போல் வடிவந் தாங்கி வந்தார் என்று புராணத்திற் காணப்படுகின்றதுமன்றி, அந்தத் துறவியின் மார்பில் பார்ப்பனருக்குரிய பூணூல் இருந்ததாகவும் பேசப்படுகின்றது. துறவின் இலக்கணத்தைக் கூறும் இந்துமத நூல்கள், சாதியைக் குறிக்கும் எவ்வித அடையாளங்களையும் துறவிகள் கைக்கொள்ளப்படாதென்று கூறுகின்றன ஆனால், திருநீலகண்டரிடம் வந்த சிவத்துறவியின் மார்பில் பூணூல் இருந்ததாகச் சொல்லப்படுவதை நோக்கும்போது, சாதிமதங் கடந்த தனிப்பெரும்பொருள் என்று சைவர்களால் பறைசாற்றப்படுஞ் சிவன் தாம் ஒரு பார்ப்பனக் கடவுள் என்பதற்கு அறிகுறியாகவே, பூணூல் வேண்டப்படாத துறவு நிலையிலும் அதனை அணிந்துகொண்டு வந்தார் என்பது பெறப்படுகின்றது. அன்றியும், தமிழ் மக்கள் தமக்குரிய ஏதை இழந்தாலும், உயிரினும் மேலானதாகக் கருதி ஓம்பப்படுந் தங்கள் மானத்தை மட்டும் எந்த நிலையிலும் —எத்தகைய துன்பங்கள் நேரிடினும் இழக்க ஒருப்படார் என்பது போலவே, பார்ப்பனர்களுந் தமக்குரிய அனைத்தையும் இழந்தாலும்; தங்கள் சாதியின் உயர்வைக் குறிக்கும் பூணூலை மட்டும் எந்த நிலையிலும் கைவிடமாட்டார் என்பதும் இதனால் நன்கு தெளிவாகின்றது. எனவே, பார்ப்பனரைத் தவிர மற்றையவர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருந்தாலும், அவர்களுக்கு உயர்வும் மதிப்புங்கொடுத்தல் ஆரிய மதமான சைவத்திற்கும், அதன் கடவுளான சிவனுக்கும் இழுக்காம் என்பதனைப் பெரியபுராணம் நன்கு தெளிவுபடுத்திக் காட்டுகின்றது. இதனை, நம்மீது துவேஷப் பிரசாரம் செய்வதாக நாக்கூசாது குற்றஞ் சாட்டும் ஆச்சாரியார் போன்றோர் உணரவேண்டுகிறேன்.

அதோடு, மனுதரும நூலாகிய ஆரியஸ்மிருதியில் வகுக்கப்பட்டுள்ள சாதிப் பாகுபாடுகள் எல்லாம் உண்மையும் இன்றியமையாமையும் என்பதனையும் பெரியபுராணம் நன்கு வலியுறுத்தி நிலைநாட்டியிருப்பதுமன்றித், தமிழ்மக்களைச் 'சூத்திரர்' அதாவது, தாசி மக்கள்—விலைக்கு வாங்கப்பட்டவர்கள் — அடிமைகள் என்பதனையும் ஒப்புக்கொண்டிருக்கிறது. அம்மட்டோ! தமிழர் கடவுள் என்று பேசப்படுஞ் சிவன் கோயில்கள் எதிலும் தமிழ்மக்கள் நுழைந்து, அங்குள்ள சிவவடிவங்களைத் தொடக்கூடாதென்ற ஆரியக் கொள்கையையும் பெரியபுராணம் ஒப்புக்கொண்டு, நந்தனாரை நெருப்பிலிட்டுப் பொசுக்கிப் பார்ப்பானாக்கிய கொடிய நிகழ்ச்சியையுந் தன்னுள் அடக்கிக் கொண்டதுமன்றிச், சிவன் கோயில்களில் நடைபெறும் பூசைமுறைகளும் — திருவிழா நிகழ்ச்சிகளும் ஆரியக் கொள்கையின்படி, வடமொழி மந்திரங்களாலேயே—பார்ப்பனரைக் கொண்டே நடத்தப்படுதல் வேண்டுமென்னுஞ் சிவாகமக் கொள்கையையும் பெரியபுராணம் ஒப்புக்கொண்டிருக்கிறது. இங்ஙனம் வடிகட்டிய ஆரியக் கொள்கைகள் எங்கு பார்த்தாலும் விரவிக் காணப்படும் ஒரு புராணத்தைத் தமிழ் மக்கள் தங்களதாகக் கொள்வது எத்தனை

அறியாமையும் இழிவும் என்பதை இனிமேலாவது எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே இதனை எழுதுகிறேன்.

இனிச், சைவர்களாற் கொண்டாடப்படுந் தேவார திருவாசகங்கள் எல்லாம், சிவனருளைப் பெற்ற சைவசமயாசிரியர்களால் – சிவனைப் போற்றியும் - புகழ்ந்தும் - வாழ்த்தியும் பாடப்பெற்ற பாடல்களாம் என்றுஞ் சொல்லப்படுகிறது. ஆனல், இந்தப் பாடல்கள் எல்லாம் பண்டாரப் பாட்டுக்கள் என்றும், அவற்றைச் சிவன் கோயில்களில் நடைபெறும் பூசை–விழாக் காலங்களில் பாடக்கூடாதென்றும் பார்ப்பனர் ஏற்படுத்தியுள்ள ஆரியக் கொள்கை இன்றுந் தமிழ்நாட்டிலுள்ள எல்லாச் சிவன் கோயில்களிலும் நடைமுறையில் இருந்து வருவதோடு, வடமொழி மந்திரங்களைக் கொண்டே சிவனுடைய காரியங்கள் எல்லாம்நடைபெற்றும்வருகின்றன. உண்மையாகவே சிவன் தமிழர் கடவுளும்–தமிழ்மொழியில் விருப்பமும் உடையவராய் இருந்தால் தம்முடைய அருளினலே – தாமே அடியெடுத்துக் கொடுத்துத்-தம்மையே புகழ்ந்து பாடப்பெற்ற தேவார திருவாசகங்களைத் தம்முடைய முன்னிலையிற் பாடக்கூடாதென்ற ஆரியக் கொள்கையின் அடிவயிற்றில் நெருப்பிட்டு, வடமொழி மந்திரங்களின் மண்டையில் அடித்துத், தமிழ்மக்களைக்கொண்டே – தமிழ் மொழியிலேயே தம்முடைய காரியங்கள் எல்லாம் நடைபெறும்படி செய்திருக்கவேண்டும். இவ்வாறு செய்திருந்தால், 'எங்கள் சிவன்' 'எங்கள் சைவம்' என்று பிதற்றித் திரியும் சில தமிழ்ப் பெரியார்களின் மானமாவது ஒருவாறு காப்பாற்றப்படும். அன்றியும், வடமொழி வழங்காத தமிழ்நாட்டிலுள்ள கோயில்களில் தமிழ் மக்களுக்குப் புரியாத வடமொழி மந்திரங்களைக் கொண்டு சிவனுடைய காரியங்கள் எல்லாம் நடைபெற வேண்டுமானல், அக்கடவுள் வடமொழியாளர்க்குரிய கடவுளாவரேயன்றித், தமிழ்பேசுந் தமிழ் மக்களுக்குரிய கடவுளாகார் என்பதனையாவது சைவத்திற்காகவுஞ் சிவனுக்காகவும் பரிந்து பேசுந் தமிழ்ப் பெரியார்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. அதுவேயுமன்றித், தமிழ்நாட்டிலுள்ள கோயில்கள் எல்லாம் தமிழ் மக்களுடைய பணத்தைக்கொண்டே அமைக்கப்பெற்றன வென்பதும், அங்கெல்லாம் நடைபெறும் பூசை—விழாச் செலவுகள் எல்லாந் தமிழ் மக்களுடைய பணத்தினலேயே நடைபெறுகின்றன வென்பதும், இங்ஙனம் தமிழ் மக்களுடைய செலவில் எல்லாக் காரியங்களும் நடைபெறுங் கோயில்கள் எதிலும் தமிழ் மக்கள் நுழையவோ, அன்றித் தமிழ்மொழியிற் காரியங்களை நடத்தவோ முடியாமல் இருப்பதன் காரணத்தையாவது சைவத் தமிழ்ப் பெரியார் எவரும் ஒரு தினைத்துணையேனும் தம் அறிவுக்கு வேலை கொடுத்துப் பார்ப்பதில்லை. வறிதே, வடமொழியைத் தேனெனப் பருகி–ஆரியக் கொள்கையைக் கற்கண்டெனச் சுவைத்துத்–தமிழ் மக்களைச் சூத்திராக்கி மகிழ்ந்து நிற்குஞ் சிவனைத் தங்கள் கடவுள் என மானங்கெட்டுச் சொல்லித்திரிவதால், தமிழறிஞர் சிலருக்கு ஏற்படும் பயன் யாதோ, யாம் அறிகிலேம். ஆரிய மதங்களாலும், ஆரிய மொழியாலும் தமிழர்க்குந் தமிழுக்கும் ஏற்பட்ட கொடுமைகளையும் கேடுதல்களையும் அறிந்திருந்தும், இன்னும் இவர்களுக்கு அறிவுந்—தன்மதிப்புந் தமிழன் என்ற உணர்ச்சியும் உண்டாகவில்லையே என்றுதான் நாம் வருந்துகின்றேம். இற்றைக்கு எழுபத்தி மூன்று ஆண்டுகட்கு முன் இருந்தவரான வடலூர் இராமலிங்கஅடிகள் என்ற தமிழ்ப் பெரியார், சிதம்பரத்திலுள்ள நடராசர் கோயிலுள் நுழைய முயன்றபோது, தில்லைப் பார்ப்பனர் அவர் பிடரியைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டனர். அதுகண்டு மனந் தாழாத அடிகள், 'இங்குள்ள நடராசரை நான் இருக்கும் இடத்திற்கு வரவழைத்துக் கொள்ளுகிறேன்' என்று ஆணை கூறி வடலூருக்குச் சென்று, அங்கே 'வடலூர்ச் சிற்றம்பலம்' என்ற பெயரால் ஒரு கோயிலை உண்டாக்கினர். அதுமுதல் அவர் அங்கிருந்துகொண்டு, மக்கள் மனதைக் கவரும் பல உருக்கமான பாடல்களையும், 'செத்தவர் எழுவார் என்று கைத்தாளம் கொட்டடி' என்பனபோன்ற புதுமையான பாடல்களையும் பாடிக்கொண்டு, நடராசரின் அருள் அந்தக் கோயிலில் இருக்கின்றதென்று பலரும் நம்பும்படி செய்துகொண்டு இருந்தார். இஃதிங்ஙனமாகத், தங்கள் கணவன்மாரையும், தங்கள் புதல்வர்களையும் இழந்த பல இளம் பெண்கள், அவர்களை மீண்டும் அடையலாம் என்ற நம்பிக்கையோடு அங்கே சென்று தங்கித் தவங் கிடந்தனர். அந்தப் பெண்களில் பலர், சில தடியர்களால் மிகவும் இழிந்த முறையில் நடத்தப்பட்டார்கள். வடலூர்ச் சிற்றம்பலத்தில் மறைமுகமாக நடைபெற்ற இக்கொடுமை, அடிகளின் செவிக்கும் எட்டுவதாயிற்று. கனவிலும் எதிர்பாராத இக்கொடுமை தம்முடைய இடத்தில் நடந்துவிட்டதே என்பதை அறிந்த அடிகள், இந்தப் பழிக்குக் காரணம் யாதென்பதையும் அறிந்து, இனியும் உயிரோடு இருத்தல் ஒரு உண்மைத் தமிழனுக்கு முறையாகாதென்று எண்ணியவராய், உடனே பாதாள அறையொன்றில் போய் மறைந்து கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டதோடு, இராமலிங்க அடிகளுக்குப் பழியுஞ் சிறுமையும் இதனல் உண்டாகப்படாதென்று எண்ணிய அவருடைய உண்மையான மாணவர்கள், 'இராமலிங்க அடிகள் சோதியில் மறைந்துவிட்டார்' என்று பலரும் நம்பும்படியுஞ் செய்துவைக்க வேண்டியவரானர்கள்.

இங்ஙனமே, தாயுமான அடிகள் என்ற தமிழ்ப் பெரியார் இராமநாதபுரத்தில் இருந்த காலத்தில், அவ்வூர் அரசரின் அமைச்சன் ஒருவன், அவர் இருந்த இடத்திற்கு நெருப்பு வைத்து அவரைக் கொல்லும்படி செய்ததையும், திருவண்ணுமலையில் இருந்தவருந் திருப்புகழ் பாடியவருமான அருணகிரிநாதர் என்ற தமிழ்மகன், திருவண்ணுமலைக் கோயிற் கோபுரத்தினின்று கீழே தள்ளிக் கொல்லப்பட்டதையும்; சிவன் வடக்கே கைலையில் இருப்பதாகப் பார்ப்பனராற் சொல்லப்பட்டும் எழுதப்பட்டும்இருப்பதைநம்பி, அச்சிவனை நேரிலே பார்ப்பதற்காகச் சென்ற திருநாவுக்கரசர் என்ற தமிழ்மகன், கேதாரம் என்னும் இடத்திலுள்ள ஒரு குளத்தில் தள்ளிக் கொல்லப்பட்டதையும்; நந்தனர் என்ற தமிழ்மகன், பார்ப்பனரால் நெருப்பிலிட்டுக் கொலை செய்யப்பட்டதையும் எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் எமது குருதி கொதிக்கின்றது!

நெஞ்சு துடிக்கின்றது! உடல்நடுங்குகின்றது! உள்ளம் வெதும்புகின்றது! ஆனால் இவ்வளவு கொடுமைகளுஞ் சைவத்தின் பேராலும்—புராணங்களின் பேராலுமே நடைபெற்றனவென்பதை உணர்ந்திருந்தும், இன்னுஞ் சைவத்தை வளர்த்துக்கொண்டும் புராணங்களுக்கு விரிவுரைகள் நிகழ்த்திக்கொண்டும் காலங்கழிக்கும் உணர்ச்சியற்ற தமிழர் சிலரின் அறியாமை என்னும் கொடிய நோயை எண்ணும்போதுதான், அதற்கு மாற்று மருந்தாக இத்தகைய உண்மைகளை அவர்கள் முன்னிலையிற் சேர்த்து, ஒரு நல்ல மாற்றம் காணலாமென விரும்புகின்றோம்.

இனி, வடமொழியின் உதவியின்றி எவ்விதத்திலும் இயங்கமுடியாத சைவம் முதலான ஆரியமதங்களும், வடமொழியின் துணையின்றி அம்மதங்களை விளக்க முடியாத மத நூல்களும் தமிழ்நாட்டில் இருக்கும் வரை தமிழ் மொழிக்குத் தனித்தியங்கும் வாய்ப்பும்— தமிழ்மக்களுக்குத் தன்மதிப்போடு வாழும் இயல்பும் ஏற்படாதென்பதை ஆணையிட்டுக் கூறுகின்றேன். சைவ சித்தாந்தத்தை விளக்கிக் கூறும் 'சிவஞானபோதம்' முதலாகவுள்ள பதினான்கு நூல்களையும், ஏனைச் சைவ சமய நூல்களையும் நன்கு அலசிப் பார்ப்பவர்க்கு, வடமொழி இல்லையேற் சைவம் இல்லை என்ற மறுக்க முடியாத உண்மை வெள்ளிடைமலைபோற் றெள்ளிதிற் புலனாவதோடு, தமிழ்மொழியின் தனித்தியங்கும் வாய்ப்புஞ் சைவத்தால் கெட்டழிந்தது, இனியுங் கெட்டழியும் என்ற உண்மையும் அங்கை நெல்லிக்கனியென அறியப்படும். அன்றியுஞ் சைவந் தமிழ்நாட்டில் தலைகாட்டாத பண்டைக்காலத்தில், அதாவது, தொல்காப்பியர் காலம் முதல் திருவள்ளுவர் காலம்வரை இருந்த தமிழ்ப் புலவரால் இயற்றப்பெற்ற இலக்கிய — இலக்கண நூல்களில் வடமொழிக் கலப்பு இல்லாதிருத்தலையும், திருவள்ளுவர்காலத்திற்கு பின் இருந்த புலவர்களால் இயற்றப் பெற்ற தமிழ்நூல்களில் வடமொழிக் கலப்பு நிறைந்திருத்தலையும் நடுநின்று ஒப்புநோக்கிப் பார்ப்பவர்க்கு, ஆரிய மதமான சைவத்தினால் ஒப்புயர்வற்ற தமிழ் மொழிக்கு ஏற்பட்ட தீமைகள் எவ்வளவின என்பது நன்கு விளங்கும். இனித், தொல்காப்பியத்திலும் திருக்குறளிலுஞ் சிற்சில வடசொற்கள் காணப்படுகின்றனவே, அதற்குக்கூறும் மாற்றம்யாதோவெனின், நன்று வினவினாய்; தொல்காப்பியத்திலுந் திருக்குறளிலும் வரும் நாலைந்து வடசொற்கள், ஒரு சமயச் சார்புபற்றிய சொற்கள் அல்லவென்பதூஉம், அவை, வடதிசைப் பார்ப்பனர் தென்திசைக்கு வந்து, இங்குள்ள தமிழ்மக்களோடு வைத்துக்கொண்ட பேச்சு வழக்கினால் ஏற்பட்ட 'திசைச் சொற்களே' யாம் என்பதூஉம் தெளிந்தறிய வல்லார்க்கு, அவை ஒரு சமயச் சார்புபற்றிய சொற்களல்லவென்பது நன்கு புலனாகும். இனிச் சைவமும் அதன் தலைவனான சிவனும் தொல்காப்பியர் காலத்திலோ அன்றித் திருவள்ளுவர் காலத்திலோ இருந்திருக்குமானால், சைவத்தைப்பற்றியுஞ் சிவனைப்பற்றியும் தொல்காப்பியத்திலுந் திருக்குறளிலும் பேசப்பட்டிருக்குமன்றோ! 'சிவன்' 'சைவம்' என்ற சொற்களே தொல்காப்பியத்திலோ அன்றித் திருக்குறளிலோ இல்லாமல்இருக்கும்போது, அவற்றுட் காணப்படும் வடசொற்களைச் சைவத்தைக் குறிக்குஞ் சொற்கள் என்று எவரேனுங் கூறுவரேல், அத்தகையினரின் அறிவு மதமெனுங் கொடிய பித்தத்தால் குழப்பம் அடைந்துவிட்டதென்றே மெய்யறிவுடையோர் கொள்வர். இனி, திருவள்ளுவர் 'கடவுள் வாழ்த்து'க் கூறியிருக்கிறாரே, அதற்கு விடை யாதெனக் கடாவுவார், காலஞ்சென்ற வழக்கறிஞர் வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் எழுதியுள்ள திருக்குறள் அறத்துப்பால் முகவுரையைக் கற்றுத் தெளியட்டும். அதிலுந் தெளிவடையமாட்டாதார், ஆரியக்குட்டையிலே விழுந்து சைவமாகிய சேற்றிலே புதைந்து தன் மதிப்பற்றுக் கிடக்கட்டும். அவர்களைப்பற்றி எவருங் கவலைப்படவேண்டியதில்லை. பகுத்தறிவைப் பயன்படுத்தி உண்மையறிந்து, மானங்கெடாமல் வாழவேண்டுமென்ற விருப்பமும் உணர்ச்சியும் உள்ள தமிழ்மக்களின் நன்மையையும், தமிழ் மொழியின் செம்மையையுங்கருதியே இத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதுகின்றோம். அன்றியும், 'பழையன

தந்தி: KALAIMANDRAM போன்: 55338

திராவிடர் முற்போக்கு வார இதழ்

கலை மன்றம்

ஆசிரியர்: **பால்வண்ணன்**

தனிப்பிரதி விலை அணு 2.

1—1—1954 முதல் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அரசியல், இலக்கியம், கதை, கட்டுரை, ஆராய்ச்சி, சிறுவர் பகுதி, பெண்கள் பகுதி, திரை அரங்கம், கேள்வி பதில் முதலிய சிறந்த அம்சங்களுடன் டிம்மி 1/4, 24-பக்கங்களுடன் வெளிவருகிறது!

1-ஆண்டுச் சந்தா ரூ. 6—0—0
6-மாதச் சந்தா ரூ. 3—0—0

உடனே சந்தாதாரராகச் சேருங்கள்!

எங்கும் ஏஜண்டுகள் தேவை!

விவரங்களுக்கு:

கலை மன்றம்
122, வரதாமுத்தியப்பன் தெரு,
P. B. No. 275 சென்னை 1.

வெல்லாம் உண்மை—புதியனவெல்லாம் தப்பு' என்ற கொள்கைகளிற் படிந்து அறிவைப் பாழாக்காமல், காலப்போக்கிற்கும் — உலக இயற்கைக்கும்-பகுத்தறிவிற்கும் பொருந்தத் தங்கள் வாழ்க்கை முறைகளை அமைத்து, மக்கள் மக்களாகவே வாழவேண்டுமென்ற ஆர்வம் எதிர்காலத் தமிழ் மக்களுக்கு ஏற்பட வேண்டுமென்ற கருத்துக்கொண்டே இத்தகைய கட்டுரைகளை எழுதுகின்றேன் என்பதையும் ஈண்டுத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாய் இருக்கிறேன். அதுவேயுமன்றி, நமது நாட்டிலுள்ள பொருட் செல்வர் பெரும்பாலும், 'உலகம் எப்படி இருந்தாலும் அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை' என்று வறிதே சோம்பிக் கிடத்தலையும், மதத்தலைவர்கள் எல்லாம், 'நமது பிழைப்பு ஒழுங்காக நடந்தால்போதும், மற்றவர்களைப்பற்றிய கவலை நமக்கு ஏன்' என்று பகுத்தறிவற்றுக் கிடத்தலையும், ஏழைஎளிய மக்கள் மதம் — கடவுள்—புராணம்— மோட்சம் — நரகம் என்பனவற்றிற்கு அடிமைகளாய்த் தங்கள் உரிமைகளை இழந்து அச்சப்பட்டுக் கிடத்தலையும் எண்ணிப் பார்க்கும்போதுதான், பக்களிடையே ஒரு மாறுதலையும்-புதிய உணர்ச்சியையும் உண்டாக்குவது பெரிதும் இன்றியமையாததென்ற ஆர்வம் என்போன்றோர்பால் எழுகின்றது.

எனவே, புராண இதிகாசங்களிற் கலைச்செல்வம் நிரம்பிக் கிடக்கின்றது-நாட்டுச் சிறப்பும் நகரச் சிறப்பும் பொலிந்து கிடக்கின்றது-கவிநயம் கரையற்றுக் கிடக்கின்றது—பொருளாழம் பொதிந்து கிடக்கின்றது-சொல்வன்மை சோர்வற்று மிளிர்கின்றது-தமிழர் மாண்பு ததும்பி வழிகின்றது. ஆகையால், புராணங்களைப் புறக்கணிக்கலாமா? இதிகாசங்களை இழிவுபடுத்தலாமா? சைவத்தைச் சாகடிக்கலாமா? வைணவத்தை வையலாமா? சிவனைச் சினக்கலாமா? திருமாலைத் திட்டலாமா? நாயன்மார்களை நாக் சுடிக்கப் பேசலாமா? ஆழ்வாராதிகள்மேல் அழும்பு சொல்லலாமா? சேக்கிழாரைச் சிறுமைப்படுத்தலாமா? கம்பரைக் கசடன் என்னலாமா? என்றெல்லாம் கேள்விகள் கேட்டு எம்மீது சரந்தொடுக்க முயலும் அன்பர்கள், முதலில், புராண இதிகாசங்களையும் ஏனைச் சைவ வைணவ மத நூல்களையும், பகுத்தறிவென்னும் விளக்கை ஏற்றி வைத்து—தன்மதிப்பென்னும் பீடத்தில் அமர்ந்து—மானம், உணர்ச்சி என்னும் இருகண்களினாலும் பார்த்துத்—தாங்கள் தமிழ் மக்கள் என்பதை நினைவில்வைத்துப் படித்துணர்வார்களானால், பின்னர் எம்மீது சீறிச் சினந்து சரந் தொடுக்கமாட்டார்கள் என்பது ஒருதலை.

'அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்த்தால் அத்தனையும் புழுமயம்' என்பதுபோலப், புராண இதிகாசங்களில் உள்ள பாட்டுக்கள் ஒவ்வொன்றையுந் துருவிப் பார்த்தால், அங்கெல்லாந் தமிழ் மக்களை இழிவுபடுத்துஞ் சொற்களும், இயற்கைக்கும் பகுத்தறிவிற்கும் பொருந்தாத செய்திகளுமே காணப்படுகின்றன. இனி அங்கொன்றும் இங்கொன்றுமாக யாதாயினும் இரண்டொரு சொற்கள் — சொற்றொடர்கள் தமிழைப் பற்றியுந்—தமிழ் மக்களைப் பற்றியும் உயர்வாகச் சொல்லப்பட்டிருந்தால், அவை, புராண இதிகாசங்களைப் பாடியவர்களையும் அறியாமல் அமைந்த தவிர்க்கமுடியாத இயற்கை அமைப்பில்பாற்பட்டவையாய் இருக்குமேயன்றி, உண்மையாகவே தமிழ் மொழியினுடையவுந்—தமிழ் மக்களுடையவும் உயர்வைக் குறிக்கும் எண்ணத்தோடு அவை அமைக்கப்பட்டவை ஆகா.

இனி, உண்மையாகவே தமிழ் மக்களின் உயர்வைக் காட்டும் முறையிற் புராண இதிகாசங்கள் பாடப்பெற்றிருந்தால், ஒரு தமிழனான இயற்பகை என்பவர் தன்னுடைய மனைவியை ஒரு பார்ப்பானுக்குக் கூட்டிக் கொடுத்தார் என்றும், ஒரு தமிழன் தனது மரபிலுள்ள ஒரு பெண்ணைத் திருமணஞ் செய்து கொள்ள விழைந்ததைக் குற்றமாக எண்ணி, அவனையும் அவனைச் சார்ந்தோரையுஞ் சிவன் கொன்றார் என்றும், ஒரு தமிழனான நந்தனாரைப் புனிமாவதற்காக நெருப்பிலிட்டுப் பொசுக்கப்பட்டதென்றும், ஒரு தமிழனான சேரமானுக்கு மோட்ச விடுதியில் இடங் கிடைக்கவில்லை என்றும், சைவசமயாசிரியர் நால்வருள், தமிழனான திருநாவுக்கரசருக்கும் மோட்ச விடுதியில் இடங் கிடைக்கவில்லை என்றும், தமிழனான திருநாவுக்கரசர் ஒன்பது பாடல்கள் பாடியும் மறைக்காட்டி(வேதாரணியத்தி)லுள்ள கோயிற் கதவு திறக்கப்படவில்லையென்றும், பார்ப்பனனான சம்பந்தர் ஒரு பாடல் பாடுவதற்குள்ளேயே கதவு பூட்டப்பட்டுவிட்டதென்றும், திருநாவுக்கரசர் தமிழனானதால், அவருக்குக் கோயில்களிற் குப்பை கூட்டும் வேலையும்-புல் செதுக்கும் வேலையும் கொடுக்கப்பட்டதென்றும், சம்பந்தர் பார்ப்பனனானதால் அவருக்கு முத்துச் சிவிகையும் முத்துப் பந்தரும் கொடுக்கப்பட்டதென்றும், திருநாவுக்கரசர் தமிழனானதால், அவர் சம்பந்தரின் பல்லக்கைச் சுமந்து திரிந்தார் என்றும் சுந்தரர் பார்ப்பனனானதால் அவருக்குக் கைலையிலிருந்து வெள்ளை யானை வந்து அவரை ஏற்றிக்கொண்டு போயிற்றென்றும், சேரமான் தமிழனானதால், அவர் கைலையினின்றும் வெளியே தள்ளப்பட்டார் என்றும், திருநாவுக்கரசர் தமிழனானதால், தீட்டுக் கழிய அவருடைய தோளிலே சூலத்தாற் சுடப்பட்டதென்றும், இன்னும் இவைபோன்ற எண்ணத் தொலையாத செய்திகள், பார்ப்பனருக்கு உயர்வும்—தமிழ் மக்களுக்கு இழிவும் கற்பிக்கும் முறையில, தமிழர் புராணம் என்று சொல்லப்படும் பெரிய புராணத்திலும் மற்றுமுள்ள புராண இதிகாசங்களிலும் எழுதப்பட்டிருக்குமா என்பதனைச் சைவத்தைக் கட்டியழுந் தமிழ் மக்கள் எண்ணிப்பார்க்கவேண்டாமா?

இக்கட்டுரை, துவேஷம், எங்கே துளிர்விடுகிறது என்பதனை அமைச்சர் பதவியிலிருந்துகொண்டே அறிவுக்குப் புறம்பான கருத்துக்களை மக்களிடையே பரப்புவதன் வாயிலாகத் தங்களுக்கு செல்வாக்கைத் தேடிக்கொள்ள நினைக்கும் ஆச்சாரியார் போன்றோருக்குச் சிறிது தெளிவுண்டாக்கும் என்று கருதுகிறேன்.

★

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
45, Tirukkachinambi St., Kancheepuram.